பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம்.

மான்கதை வசனம்

என்னும்

மான்ஈமான் கொண்ட கிஸ்ஸா.

இது

கோட்டாறு,

மகுதூம் பாவாகாஸீம் தரகனாரவர்கள்

குமாரர்,

வா-மு-முஹம்மது யூசுபுலெப்பை

அவர்களால் எழுதப்பட்டு.

ஆம்பூர்,

எம்-ஏ-எஸ் ஹாஜி அப்துஸ் ஸத்தாற் ஸாஹிபு

அவர்களின் நன்முயற்சியினாலும்

சொந்தபொருளுதவியினாலும்

சென்னை.

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1335.

ஸ்டர் காப்பிரைட்.

[அணா-5.

13 OC

248

927:31
N35
172066

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

13 OCT

மான்கதை வசனம்

என்னும்

மான்ஈமான் கொண்ட கிஸ்ஸா.

இது

கோட்டாறு,

மகுதூம் பாவாகாஸீம் தரகனாரவர்கள்

குமாரர்,

வா-மூ-முஹம்மது யூசுபுலெப்பை

அவர்களால் எழுதப்பட்டு

ஆம்பூர்,

எம்-ஏ-எஸ் ஹாஜி அப்துஸ் ஸத்தாற் ஸாஹிபு

அவர்களின் நன்முயற்சியினாலும்

சொந்தபொருளுதவியினாலும்

சென்னை.

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1335.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

இதன் விலை] [அணா-5.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் கீழ் காணும் நூல்களை பாட்டாகவும், வசனமாகவும், மூலமும் உரையுமாகவும், சுத்தத்தமிழிலும், அறபுத்தமிழிலும், அச்சிட்டு நாம் இங்கிலீஷ் இலாகா, புதுவை இவைகளில் காப்பிரைட் ரிஜிஸ்ட்டர் செய்திருப்பதினால் ஷை நூல்களை வெவ்வேறாகத் தனித்து பாட்டாகவும், வசனமாகவும், மூலமும்உரையுமாகவும், சுத்தத்தமிழிலும், அறபுத்தமிழிலும், மற்றும் இதரபாஷைகளிலும், எமதனுமதியன்றி ஒருவரும் அச்சிடலாகாது

அப்படிமீறி அச்சிடுவார்களே யானால் அச்சிடுபவர்களிடமும் அச்சாபீஸ் தலைவர்களிடமும் கனம்பொருந்திய கவர்மெண்டுசட்டப்படி சகல நஷ்டத்தையும் நாம் வசூல்செய்வோம்.

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நூல்கள்.

1. மான்கதை வசனம் என்னும் மான்சமான் கொண்டகிஸ்ஸா.
2. இந்நூலுக் கசலாகிய மான்கதை அல்லது நபியுல்லா மானோடு பேசிய காரணக்கதை மூலமும் உரையும்.
3. கோட்டாறு பாவாகாஸீம் வைத்தியரவர்களியற்றிய *வைத்திய சதகம் மூலமும் உரையும்.
4. தற்கலை மெஞ்ஞான சொரூபராகிய பீர் முகம்மது சாஹிபு இயற்றிய மெஞ்ஞான சரநூல் மூலமும் உரையும்.

மேற்கூறிய நூல்களை இந்நூலுடன் சேர்த்து ரிஜிஸ்டர் செய்திருப்பதை யாவர்களும் காண்க.

இங்ஙனம்,

வா-மு-முஹம்மது யூசுபு லெப்பை.

கோட்டாறு,

---

* இந்த வைத்திய சதகத்தில் ஷை வைத்தியரவர்கள் அமைக்கப்படாத சூட்சம முறைகள் அநேக முண்டு. அவைகளை யேட்டுப் பிரதிகளாகவே எழுதிவைத் திருந்தார்கள். அவைகள் இதுகாறும் வெளிவராமலிருந்து விட்டது. தற்போது நாம் அவைகளில் சில நுட்பங்களான சிட்காமுறைகளைத் தெரிந்தெடுத்து இந்நூலுடன் சேர்த்து அச்சிட்டிருக்கின்றனம். இந்த அருமையான நூலைப்பார்த்து இக்காலத்து நேயர்கள் ஒவ்வொருவரும் இலகுவாக அவுஷதங்களைத் தெரிந்து தம் சொந்தத்திற்குவைத்தியம் செய்து கொள்வதற்கு இதுவே மிக்க அனுகூலம்.

பிஸ்மில்லாஹி.

சாத்துக் கவிகள்.

சென்னை-இராயபுரம்,

மவுலவி காலி ஷாஹ் முஹம்மது

இனயத்துல்லா லெப்பை தைக்கா கலீபத்துல் காதிரி

அவர்களியற்றியது.

விருத்தம்.

காட்டகத்து வாழ்ந்துளமான் ஈமான்கொண்ட
கருதரிய காரணத்தை கண்டேயென்ன
நாட்டகத்து வைத்தியர்கோன் பாவாகாசீம்
நயந்தளித்த கவியமுதை நல்லோர்வாழுங்
கோட்டாற்று முஹம்மதுயூ சுப்புலெப்பை
குறையகற்றி பரந்தோங்க வசனஞ்செய்தான்
வாட்டமுற்றோர் மனத்தழுக்கை மாற்றவல்ல
மருந்திதே வெனவுலகில் வழுத்தலாமே.

திருநெல்வேலிஜில்லா மேலப்பாளையம்,

காளைஹஸன் அலிப்புலவரவர்களியற்றிய

இரட்டை யாசிரிய விருத்தம்.

மாவென்ன மகியிதினி லாவென்ன வொளியொளிரு
மக்கநகரிற் பிறந்த
மஹ்மூது நபியவர்கள் மானுக்குப் பிணைநின்ற
மாட்சியாஞ் சரிதையதனைக்
காவென்னு மரிபலவு மேதுன்ன லோடுவளக்
கழனிசூழ் கோடைநகரிற்
கைத்திரிசி வாவாசி வைத்திய ரெனும் பாவாக்
காசீம கத்வ வித்வான்

பாவென்ன வேபலரி னுவன்னும் வாருகப்
பாடியபு ராணகவியைப்
பாலினெடு பாகைப் பழத்தொடு கலந்ததைப்
பருகுவது போலின்பமாய்
வாவன்ன மூனவெ னப்பேர் பெறுமுஹம்
மதுயூசு பென்ற வறிஞன்
மானிடரெ லாமெளிதி லேயறியும் விதமாக
வசனமது செய்தனனரோ.

சென்னை-மகாவித்வானும், நேடிவ் டாக்டருமாகிய

த. பூ. முருகேச நாயகரவர்க ளியற்றிய

எண்சீராசிரிய விருத்தம்.

அருளுருவாய் மெய்ஞ்ஞான வொளி பரப்பி
அனைத்துயிரு மின்பநலங் கொழிப்ப வந்த
பெருமானார் மக்கநகர் நபியுல் லாவோர்
பெண்மானை யடவிதனிற் பிணையாய்க் காத்த
திருச்சரிதந் தனைத்தமிழ்ச்செம் பாவா லஃஆ
செய்தளித்தான் கோட்டாற்றி னுயுள்வேத
உருவானேன் றமிழ்மாறன் பாவா காசீம்
உயர்குணவேள் பிறந்தபயன் பெற்றுன் வாழி

அந்நூலை யெளிதெவர்க்கும் விளங்கத் தெய்வ
வருந்தமிழி னணிமிதப்ப வசனமாக்கி
முந்நூலின் முறைநிறுத்தி யச்சி லீந்தான்
முத்தர்குலா மணிமருதப் பழனவேலி
பொன்னூருங் கோட்டாற்றுப் புகழி னேங்கும்
புனிதன்மகு தூம்பாவா காசீமென்பார்
முந்நோற்ற தவத்துதித்தோ னறிஞர் வாழ்த்தும்
முகம்மதுயூ, சுபுலெப்பை முனிவ னன்றே.

சென்னை-சமரசஞான சங்கத் தலைவரும்

ஸ்ரீமான், சுரைக்காய் சுவாமிகளின் பாதசேகரருமாகிய

ஸ்ரீமத். ஷண்முகானந்த சுவாமிகள் இயற்றிய

அறுசீர் விருத்தம்.

முன்னவன்பே ரருட்கடலின்மூழ்கி
    யருளொளிகாட்டி முடிவிலன்பாற்
கன்னலெனு மின்மொழியாற் கண்டவருட்
    பிணிமாற்றிக் கலங்கா வெற்றி
மன்னவன்றென் மரபுதித்த மக்கவள
    நகர்நபிமுன் வனத்திற் பாசத்
தின்னலுறும் புல்வாயி னிடரொழிக்கப்
    பிணையாக விசைந்த காதை.

சந்தமிகுந் தமிழ்க்கவியாற் சாற்றினன்
    பாவாகாசீம் சதுரன் மேனாட்
டந்தவிதைக் கத்தியஞ்செய் துயிர்களிக்க
    நாணுளுங் கனிந்தளித்தான்
சொந்தமென முத்தருறை விடமாகுங்
    கோட்டாற்றிற் றூயகேள்வி
முந்தவரு முகம்மதுயூசுபுலெப்பை
    யெனுஞ் சுகுண முழுவலோனே.

சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் வசிக்கும் ஆயுள்வேதியரும்
சிகாளத்திப்புராண வசனம் முதலிய கிரந்தங்களின் கர்த்தாவும்
சேலம். ஸ்ரீ. திருவள்ளுவநாயனார் சங்கத்தலைவருமாகிய

ஸ்ரீமான். நெ மு. ஷ. ஷண்முக சுந்தர நாயனார்

அவர்கள் இயற்றிய

விருத்தம்.

வன்னெஞ்ச னுமறபி வன்னியனோர்
நாள்வனத்தில் மயங்கி நின்ற
நன்னயமார் மானொன்றைப் பிடித்ததனை
மடித்திடவே நாடு மெல்லை
யன்னதுநம் மகவுக்குப் பாலருத்தி
வரும்வரையி லங்கோ விந்தக்
கன்னெஞ்சன் விடுவானோ வென்று
கருதிக்கலங்கி களைக்கும் போதில்.

மண்டலமும் விண்டலமும் படைத்தளித்தா
ளவ்வொருவன் மகிழ்ச்சி யோங்கக்
கொண்டரசூல் முஹம்மதெனு நபிபெருமான்
குளிர்பதத்தைக் குனிந்து போற்றி
அண்டர்தொழும் பெருமானே யடியேற்குப்
பிணையாகி யருளு மென்ன
விண்டவுட னவ்வாறுய் விலங்கதனைக்
காத்திட்ட விந்தை தன்னை.

இருக்குமிசு லாமதத்த ரெண்ணிவழி
பட்டுய்வா னிரத மூறிப்
பெருக்கெடுக்கு நற்றமிழில் மான்கதையென்
றோர்வசனம் பிறங்கச் செய்தான்
அருட்குலவுங் கோட்டாறு பாவாகா
சிந்தவத்தா லளித்த மேலோன்
தருக்கறுநல் முஹம்மதுயூ சுப்லெப்பை
யாலிமெனுந் தமிழ்வ லோனே.

சென்னை மகாவித்வானும் நேடிவ்டாக்டருமாகிய

ஸ்ரீமத்·மா-கந்தசாமிபிள்ளை அவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி லாசிரிய விருத்தம்.

முத்தொளிரு மூகம்மதிறை மூதறிவாங்
கலிமாவை முகந்து ஞான
சித்தொளிரு தீன்பயிரை யுட்கொள்ள
வேட்டுவன்பாற் சிக்கலுற்று
புத்தொளிருந் தரைதோயா நின்மலரே
பிணைப்பட்டு புகன்ற வாக்கை
வித்தொளிரும் மானுரைத்த வாசகத்தை
யொருநூலாய் விரித்தா னன்றே.

அன்னவனே ஆயுள்வேதக் கடலின்
கரைகண்ட வறிஞன் மேலாம்
மன்னவனும் கோடை நகர் பாவாகாசீம்
வள்ளல் வரைந்த ஏட்டை
பன்னவனும் கோட்டாறு முகமதுயூ
சுபெனுமிகு பண்பு வாய்ந்தோன்
இந்நிலத்தி லச்சியற்றி யாவரும்
பயனறிய இனிது தந்தான்.

கடலமுதோ கழையமுதோ கதிரமுதோ
கலையமுதோ களிப்புத் தோய்ந்த
உடலமுதோ உயிரமுதோ உலகமுதோ
உரியமுதோ உணர்விஞ் ஞான
மடலமுதோ மதியமுதோ மாரமுதோ
மறையமுதோ மாந்தும் அன்பர்
திடனமுதோ தேவமுதோ வென்னென்பேன்
இந்நூலின் சிறப்பை மன்னே.

சாத்துக் கவிகள் முற்றுப் பெற்றன.

பிஸ்மில்லாஹி.

மான்கதை வசனம்

என்னும்

மான்ஈமான் கொண்ட கிஸ்ஸா.

காப்பு.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மானுக்கு நபியிரங்கி வாய்த்ததோர் பிணையாய் நின்ற
ஞானமாங் காதை தன்னை நானில மீதுநல்ல
தேனிகர் தமிழினாலே சிறப்புறு வசனஞ் சொல்ல
வானுய ரேகன் பொற்றாள் வாய்த்திடுங் காப்பதாமே.

ஆண்டவன் துதி.

எல்லாப்புகழும் கீர்த்தியும் சர்வ வல்லமையும் நிறைந்த அல்லாகுத்த ஆலாவுக்கே உண்டாவதாக; ஆதியாகிய பெரியவனே! எந்நாளிலும் நிலைபெற்றிருப்பவனே! அடியாரிடத் தன்புள்ளவனே! எங்கும் வியாபித்திருப்பவனே! சோதிவடிவ மானவனே! பரிசுத்தமுள்ளவனே! ஒப்புவமை யில்லாதவனே! ஊணுறக்க மற்றவனே, எல்லாவற்றிற்கும் தலைவனே! வானம், பூமி, அறுசு, குறுசு, லவ்குலம், சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், நரகம், சுவர்க்கம், பஞ்சபூதங்கள், மலக்குகள், மனிதர்கள், பிராணிகள், ஸ்தாவர சங்கமங்கள் முதலிய எல்லாவற்றையும் படைத்தவனே! எவர்கள் உள்ளக்கருத்தையும் நினைக்குமுன் உணர்வோனே! சகல விடங்களிலும் செங்கோல் செலுத்தும் சீமானே! சர்வ வல்லமையும் நிறைந்தவனே! கல்லினுள் தேரைக்கும் கருப்பையின்முட்டைக்கும் உணவளிக்கின்ற உத்தமனே! எண்ணி லடங்காதவனே! கண்ணின்றிக் காண்பவனே! காதின்றிக் கேட்பவனே! மூக்கின்றி முகர்பவனே! நாவின்றி யுரைப்போனே! கையின்றிக் கொடுப்போனே! காலின்றி நடப்போனே! எங்கள்நாயகம் எம்மறைக்குந் தாயகம் சர்வரே ஆலம்முகம்மது முஸ்த

பா முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களைத்தோற்றுவித்து உலகத்தைச் சீர்படச்செய்த புண்ணியனே! யாறப்பு யாகு தாயே! நபிகள் நாயகம் முகம்மது நபிஸல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கள் மானுக்குப் பிணையாக நின்ற இந்தப் புண்ணிய கதையை வசனமாகச் சொல்லுதற்குத் தக்க ஞானத்தையும், கல்வியையும், வாக்கு வன்மையையும், தந்தருள்வாயாக; நான் சொல்லும் இக்கதையில் குற்றங் குறைகள் வராமல் நற்றிருவருள் புரிவாயாக; இதனைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும், படிக்கும்படி செய்வோர்க்கும், சகல பாவங்களையும் நீக்கி, நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும், நிலைபெற்ற நற்பதவியையும், அழியாப் புகழையும், விலகாத வெற்றியையும் கொடுத்து எப்பொழுதும் அவர்களை ஆண்டருள்வாயாக.

நபிநாயக முதலிய பெரியோர் துதி.

வஞ்சனை பொருந்திய காபிர்கள் மாளும்படி ஒருபிடி மணலினுலே அவர்களை வென்றவரும், தம்மைத் தஞ்சமென் றடைந்தவர்களுக்கு சுவர்க்கப்பதவி தருவேனென்று அவர்களை இஸ்லாமாக்கியாண்டவரும், தம்மனதிற்குப் பொருந்தியவராகிய ஹபீபாசன் காணும்படி நிலவினை வரவழைத்தவரும். பகைவர்களுடைய ஏவுதலாலிடப்பட்ட நஞ்சினை அமுதாக வுண்டு சுகமுற்றவருமாகிய நபிகணாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களுடைய, தாமரைப் பாதங்களை, நான் சொல்லும் இந்த மான்கதை இனிதாக முடியும்பொருட்டுத் துதிசெய்வேனாக; இன்னும் எங்கள்நாயகம் றஸூல் சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கள், தம்மடியிற் படுத்து நித்திரை செய்யுங் காலத்தில் மலைப்புற்றிலிருந்து வெளிவந்த நாகத்தை வெளிவராமல் அப்புற்றில் காலைவைத்துத் தடுத்தவராகிய சிறப்பு வாய்ந்த அபூபக்கர் சித்தீகுறலி யல்லாகு அன்கு அவர்களையும் துதித்து வணங்குவேன்; இன்னும் கொடிதாகிய போர்க்களத்திற் புகுந்து வஞ்சகம் பொருந்திய காபிர்களை நாசப்படுத்தி வெற்றிகொண்ட கூர்மையான வாளாயுதத்தை யேந்திய உமறுறலி யல்லாகு அன்கு அவர்களுடைய திருப்பாதங்களையும் கனவிலும் மறவாமல் துதிசெய்வேன்; இன்னும், பொன்னகரத்தி லுள்ளவர்கள் முதலிய எல்லோரும் போற்றுதற் குரியவரும், முன்னவனு லனுப்பப்பட்ட திருத்தூதரும், தங்களுக்கிறங்கிய பழைமையான வேதத்தை ஒழுங்காகச்

செய்தவருமாகிய நலம்பொருந்திய றஸூலில் ஸல்லல்லாகு அலைகிவ ஸல்லமவர்களுக்கு, மருகராகிய உதுமான்றலி யல்லாகு அன்கு அவர்களுடைய பொற்பாதங்களையும் சிரமேற்கொண்டு துதிப்பேன்; இன்னும், துர்க்குணம் பொருந்திய பல அரசர்களின் நகரங்களையழித்து, அவர்களைச் சிறைபிடித்து முகம்மதியா மார்க்கத்தை நிலைபெறச் செய்த நபிநாயக மவர்களுடைய மருகரான அலிறலியல்லாகு அன்கு அவர்களுடைய இரண்டு பாதங்களையுந்துதிப்பேன்; இன்னும், மகா சிறப்பும் புகழுந்தங்கிய அந்த அலிறலியல்லாகு அன்கு அவர்கள் பெற்ற புத்திரராகிய ஹஸன், ஹுஸைன் றலியல்லாகு அன்குமா ஆகிய இருவர்களுடைய பாதங்களையும்சிந்தித்துத் துதிசெய்வேனாக.

நூல் வரலாறு.

மான் ஈமான்கொண்ட புண்ணிய சரித்திரமாகிய இக்கதையைச் சில வருடங்களுக்கு முன்னே, முஸ்லீம்களாகிய சகோதரர்களெல்லோரும் படித்து மகிழ்ந்துய்யும்படி, செல்வச் சிறப்பும், மற்றை எல்லா வளங்களும் குறைவின்றி நிறைந்திருப்பதும், பல மகான்கள் வாசஞ் செய்யக் கூடியதும், மிக்க புண்ணியம் பொருந்தியதும், தேவர்கள் முதலிய யாவர்களாலும் புகழ்ந்து கொண்டாடப் பட்டதுமாகிய கோட்டாறு என்னும் நகரத்தி லவதரித்த, பாவாகாஸீம் வைத்தியர் என்பவர், தமிழ்ப்பாடலாகச் செய்தனர். அப்படிப்பட்ட இதனை, முஸ்லீம் பிறவிகளாகிய ஆண்பெண்களெல்லோரும் எளிதிற் படித்துணரும்படி இப்போது யான் தெளிவான தமிழ் வசனமாகச் செய்யத் தொடங்கினேன்.

அவையடக்கம்.

முஸ்லீம் பிறவிகளெல்லாம் விரும்பிக் கொண்டாடத் தக்கதும், மேற்கூறிய பாவாகாஸீம் வைத்தியரவர்களால் பாடலாக இயற்றப்பெற்றது மாகிய மான் கதையென்னும் மகா மேன்மை வாய்ந்த இப்புண்ணிய சரித்திரத்தைப் பல நாவலர்முன்னே நான் துணிந்து வசனமாகக்கூறுதல் எதை நிகர்க்குமென்றால், ஆரவாரத்தை யுடைய கடலோசைக்கு முன்னே, குயவன் மண்ணெடுத்த சிறுபள்ளம் அலை வீசிச் சப்தமிடுவதை நிகர்க்கும்; இன்னும், மேகமானது இருண்டு முழங்கிப் பொன்மாரி பெய்யும்போது, அதற்கு முன்னே பனி

நின்று சொரிவதையும் நிகர்க்கும்; பின்னும் போர்முகத்தில் நின்று யுத்தம் புரியும் யானையிற் கட்டியமணி பேரோசையிட அதற்குமுன்னே குதிரையிற் கட்டியமணி கிணுகிணென் றசைவதை நிகர்க்கும்; ஆதலால், நான் இவ்வாறுகூறும் இந்நூலில் பாலும்நீரும் கலந்தது போலும், நாரும் மலருங் கூடியதுபோலும், நபிநாயக மவர்களுடைய புகழ்ச்சியான விஷயங்களுடனே என் மதிக்குறைவால் சிற்சில பிழைகளும் நேர்ந்திருக்கக்கூடும்; அவ்வாறு நேர்ந்திருப்பின் அன்னமானது பாலைபுத்தேசித்து நீரையுமேற்றுப் பாலையும்நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் உட்கொள்வதுபோலும், மனிதர் மலருடனே கூடியநாரைப் பெரிதாக நினையாமல்மலரையே பெரிதாக நினைத்துச் சேர்த்துக் கொள்வதுபோலும், குற்றத்தைக் கருதாமல் குணத்தையே பெரிதாகக் கருதி இந்நூலை யேற்றுக் கொள்ளுமாறு கற்றறிந்த பெரியோர்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

நூல்.

மக்கமாநகர்ச் சிறப்பு.

எல்லா வல்லமையும் பூரணமாக நிறைந்தவனும், ஒப்புவமையற்றவனும், புத்தியில் அளவிடப்படாத மகிமை யுள்ளவனும், எங்கும் வியாபகனும், எல்லாச் சீவராசிகளிடத்தும் நிறைந்த அன்பைச்செலுத்தி அவற்றை ஆதரிக்கின்ற சர்வ கர்த்தனுமாகிய அல்லாகுத்த ஆலா, ஆதியில் திருவருள் சுரந்து சிருஷ்டிக்கப்பெற்ற பல வுலகங்களில் மிகவும் வளமுற்றோங்கிய இப்பூமண்டலத்தில் பற்பல விதங்களாக ஆங்காங்கே நிலைபெற்று விளங்குகின்ற உன்னதம் பொருந்திய நகரங்களுக்குள்ளே மிகவும் சிறப்புவாய்ந்தது எக்காலத்து மழியாக் கீர்த்தியையுடைய மக்கமாநகரமேயாம். இத்தகைய இந்நகரத்தில், அல்லாகுத்த ஆலாவின் சிருஷ்டிகளில் மேன்மையானவரும், நபிமார்களுக்குள்ளே மிகச் சிறந்தவரும், முறுஸலான நபிமார்களுக்கெல்லாம் மேன்மையானவரும் எல்லா முஸ்லீம்களும் கொண்டாடத் தக்கவரும், எல்லாமுஸ்லீம்களான உம்மத்துகளை இரட்சித்து ஷபாஹத்துச் செய்கிறவரும், எல்லாச் சீவராசிகளும் நன்மையை உணர்ந்துய்யும் பொருட்டு, அல்லாகுத்த ஆலாவால் கிருபையுடனே அனுப்பப்பட்ட திருத்தூதரும், குறைஷி குலத்தி லரசராகிய அப்துல்லா அவர்களின் புத்திர சிகாமணியுமாகிய முகம்மது முஸ்தபா

ரசூல் சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கள் அவதரித்த படியினாலும், மிகவும் மேன்மையும் சிறப்பும் வாய்ந்த கஃபதுல்லா அமைக்கப் பட்ட படியினாலும், முஸ்லிம் பிறவிக ளெல்லோரும் கொண்டாடத் தக்க அநேகம் பெரியோர்கள் வாசஞ் செய்வதாலும், பல செல்வங்களும் நிறைந்திருப்பதாலும், பார்ப்பவர்கள் அதிசயிக்கத்தக்க அலங்காரம் பொருந்தி யிருப்பதாலுமே இந்நகரமானது இவ்வாறு சிறந்ததாயிற்று. இவ்வாறு சிறப்புற்ற இந்நகரத்தின் வளமானது மிகவும் சிரேஷ்டம் பொருந்திய மகா வித்வான்களாலும் அளவிட்டுக்கூறுதல் முடியாது. ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில் அதிற் சிறிதுசொல்லி அதன்மேல் சரித்திரத்தை ஆரம்பிக்கின்றேன்.

இந்தச்சிறப்புப் பொருந்திய மக்கமா நகரத்திலே, அல்லாகுத்த ஆலாவின் திருத்தூதரான முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய வமிசத்திலுதித்தவர்கள் வாசஞ் செய்யும் தெருக்களும், மற்ற இராஜவமிசத்தார் பொருந்திச் செல்வத்துடன்வாழ்கின்ற வீதிகளும், சஹாபாக்கள் முதலிய பலபெரியோர் வாசஞ்செய்யும் தெருக்களும், மற்றைய முஸ்லீம்கள் வசிக்கும் தெருகளும் நான்கு பக்கங்களிலும் கோணாமல் நீண்டு வரிசைபெற்று விளங்கிக் கொண்டிருக்கும். இந்தத் தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் ஒழுங்காக அமைக்கப் பெற்றிருக்கும் சித்திரக் கட்டிடங்களெல்மாம் வெண் சுண்ணம் பூசப்பெற்றுப் பலவிதமான சித்திர வேலைப் பாடுகளுடனே ஆகாயத்தை அளாவியுயர்ந்து, மேலேவரும் சூரிய சந்திரர்களும் ஒளி மழுங்கும்படி மிக்கபிரகாசத்தை வீசிக் கொண்டிருக்கும். அம்மாளிகைகளின்மேலுப்பரிகைகளில் அரம்பாஸ்திரீகளும் பார்த்து வெட்கத்தை யடையும்படியான அழகு பொருந்திய பலமாதர்கள், மஞ்சனநீராடி, கூந்தலுக்கு அகிற்புகையூட்டி அக்கூந்தலை அவிழ்த்துலர்த்திக்கொண்டு, மயில்கள் தோகையை விரித்துலாவுவதுபோல் உலாவுவார்கள்; அப்போது அங்கேவரும் சந்திரனும் அவர்களுடைய முகத்தழகைக்கண்டு தினந்தோறும் வெட்கத்தை யடைந்து விலகிச் செல்வான்; இன்னும் மேற்பக்கங்களில் சஞ்சரிக்கும் மேகக்கூட்டத்திற்கும் அவர்களுடைய கூந்தலுக்கும் வேற்றுமை தெரியாம லிருக்கும்; இன்னும் அவர்கள், கூந்தலுக்கு வாசனைத் தைலந்தடவிச் சீப்பிட்டுச் சீவி அதனை முடித்து, மலர்சூடி, பொற்பட்டுடுத்தி, இரத்தினக் கச்சணிந்து, இரத்தினா பரணங்களணிந்து, களபகஸ்தூரிபூசி மகிழ்ச்சியுடனே சஞ்சரித்துக் கொண்டி

ருப்பார்கள். இன்னும் அந்த மாளிகைகளிலே தினந்தோறும் பேரழகு வாய்ந்த அந்தப்பெண்கள் மார்க்க வொழுங்கு தவருதவர்களாயும், ஐந்துவேளைத் தொழுகை தவருதவர்களாயும் உதய காலத்தில் நம்சிறந்த வேதமாகிய மேன்மையான குர்ஆன் ஷரீபை ஓதிக்கொண்டும், மற்றநேரங்களில், பந்து, அம்மானை, சதுரங்கம்முதலிய விளையாட்டுக்களை நடத்திக்கொண்டும் நற்காலங்கழித்து, எத்தீம்கள் விரும்பியவைகளைக் கொடுத்தும், விருந்தினர்களுக்கு அன்போடு விருந்தளித்தும் கணவர்சொற் கடவாமல் கற்புடன் நடந்தும் பல புண்ணியங்களைத் தேடிக்கொண்டிருப்பார்கள். அங்குள்ள புருஷர்களோ, 'தீவினைவிட்டீட்டல், பொருள்,' என்றபடி,கெட்டகாரியங்களைச் செய்யாமல் நல்ல காரியங்களையே செய்து அவற்றின்மூலம் பொருளைத்தேடி அப்பொருளைக்கொண்டு மார்க்கசட்டந் தவருமல் இல்லறம் நடத்தி தானதருமங்களைச் செய்துகொண்டும், தொழுகை நோன்பு, ஸகாத்து, ஹஜ்ஜு முதலியவற்றைக் கிரமப்படி நடத்திக்கொண்டும், எக்காலத்திலும் தங்கள் கீர்த்தியானது நிலை நிற்கும்படி சந்தோஷத்துடனே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். பெரியோர்கள் வாசஞ் செய்யும் மாளிகைகளிலே எக்காலத்தும் வேதபாராயணஞ் செய்யும் முழக்கமும், புண்ணிய புருஷர்களைப் புகழ்ந்துபாடும் பாசுரங்களின் ஒலியும் மிகுந்திருக்கும்.

இன்னும் இந்நகரத்திலே பலநிலா முற்றங்களும், பொன்மணி மேடைகளும், செய்குன்றுகளும், பந்தடி மேடைகளும், யானைநடை பழக்கும் வெளிகளும், குதிரைகளை நடைபழக்கும் வெளிகளும், கூடகோபுரங்களும், கோட்டைகளும், மடைப்பள்ளிகளும், சத்திரங்களும், முஸாபர்கானுக்களும், மேகந்தவழும் பள்ளிகளும், நாடகசாலைகளும், சங்கீதசாலைகளும், யானைச்சாலைகளும், தேர்ச்சாலைகளும், குதிரைச்சாலைகளும், பின்னும் பற்பல விசித்திரக் கட்டிடங்களும் எங்கும் நிறைந்திருக்கும். இந்நகரத்திலுள்ள இராஜ வீதிகளிலே ஆயுதப் பயிற்சிகள் செய்யும் ஒலியும், தேர்களை நடத்தும் முழக்கமும், யானைகளை நடத்தும் பேரொலியும், குதிரைகளைச் செலுத்தும் கொண்டாட்ட விரைச்சலும், ஒட்டகைகள் செல்லும் மட்டிலடங்கா வொலியும் எப்பொழுதும் முழங்கிக் கொண்டிருக்கும்; கடைவீதிகளிலே, முத்து, பவளம், கோமேதகம், வைடூரியம், மாணிக்கம் முதலிய இரத்தினங்களைப் பரப்பி வியாபாரஞ் செய்யும் பேரொலியும், மேலான பட்டாடைகளையும் இரத்தினாபரணங்களையும் நிறைத்

து விற்பனை செய்யுஞ் சந்தடியும், காட்டிலுண்டாகும் வஸ்துக்கள்; கடலிலுண்டாகும் வஸ்துக்கள், நாட்டிலுண்டாகும் வஸ்துக்கள், மலையிலுண்டாகும் வஸ்துக்கள் ஆகிய வற்றையெல்லாம் நிறைத்து ஆங்காங்கே வியாபாரஞ் செய்வதா லேற்படும் பேரிரைச்சலும் இவற்றை யெல்லாம் வாங்கும் பொருட்டு வந்து நிறையும் பலவித மான ஜனங்கள் செய்யும் சந்தடியும் கடலொலியும் பின்னிடும்படி அதிகரித்திருக்கும். இந்நகரத்தைச் சுற்றி வளைந்திருக்கும் கோட்டைமதிலோ, மேகமண்டலம் வரை நிமிர்ந்தோங்கி விரோதிகளை வெல்லத்தக்க பலவிதமான யந்திர தந்திரங்கள் பொருந்தியதாய் எப்பேர்ப்பட்ட பகையரசரும் சமீபிக்க முடியாதபடி மிக்க வல்லமையுடன் அமைந்திருக்கும். இந்நகரத்தின் நடுவில், இதற்குத் திலகம் போல அமைந்திருக்கும், கஃபத் துல்லாவோ, தன்னைத் தரிசிப்பவர்களின் பாவங்களையெல்லாம் தீர்த்து அவர்களைப் புண்ணிய சீலராக்கும் மகிமையுடையதாய் விளங்கும்; இதிற்பொருந்தி யிருக்கும் மனூராவானது, ஆகாயத்தை யளாவி யுயர்ந்து, சிற்பத்தொழிலிற் கைதேர்ந்த பெரிய சிற்பிகளும் பார்த்து ஆச்சரியங் கொள்ளும்படியாக உயர்ந்த சித்திரத் தொழிலகளுடனே பிரகாசிக்கும்; இவ்வகை வேலைப்பாடுள்ள இந்த கஃபத்துல்லாவானது, ஹஜ்ஜி செய்யும்போது ஆறுலட்சம் மனிதர் அடங்கி யிருக்கும்படி அமைக்கப்பெற்றது. அவ்வாறு இது ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், ஹச்சு செய்யுங்காலத்தில் ஆறுலட்சம் பேருக்குமேல் எத்தனைலட்சம் மனிதர்கள் வந்து நிறைந்தாலும் அல்லாகுத்த ஆலாவின் மட்டி லடங்கா மகிமையினாலே அவ்வாறு வந்து நிறைபவர்களுக்கெல்லாம் தவாபு செய்தற்குப் போதுமான இடந்தரும். இஃதன்றி இந்நகரத்தில், 'ஸம்ஸம்' என்னும் மகிமைவாய்ந்த கிணறொன்றிருக்கின்றது அதினுடைய மகிமையோ அளவிட்டுச் சொல்ல முடியாததாகும். அதிலுள்ள புண்ணிய தீர்த்தத்தை உட்கொள்ளுவோர், இஷ்ட சித்திகளையெல்லாம் அடைவார்கள். இன்னும், இப்புண்ணிய நகரத்திலே 'ஹஜ்ருல்லஸ்வது', என்னும் கல்லொன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனிடம் சென்று அதனை முத்தியிடுவோர், தங்கள் பாவங்களெல்லாம் நீங்கப்பெற்றுப், புனிதராவார்கள்' இஃதன்றி, இன்னும் நபி நாயகம் அவர்கள் திருவவதாரஞ் செய்த புண்ணிய தலமும் இந்நகரத்தில் இன்னும் மகா மகிமையுடனே விளங்கிக்கொண் டிருக்கின்றது.

இன்னும், இந்தப் புண்ணிய தலமாகிய மக்கமாநகரத்தின் பக்கங்களிலே, மா, பலா, கமுகு, சண்பகம் முதலிய பலவகைப்பட்ட தருக்கள் நிறைந்த சோலைகள் மேகமண்டலம்வரை வளர்ந்தோங்கி மேகங்கள் வந்து நித்திரை செய்யும்படி செழிப்புற்று விளங்கும்; அச்சோலைகளில் ஆங்காங்கே பற்பல மரங்களில் பலவர்ணம் பொருந்திய புஷ்பங்கள் மலர்ந்து பூமியிலுதிர்ந்து எங்கும் புஷ்பப் பாயல் விரித்ததுபோலப் பரவி இனிமையான பரிமளம் வீசிக்கொண்டிருக்கும்; இன்னும் அம்மரங்களில் மலர்ந்த புஷ்பங்களி லிருந்து சொரியுந் தேனை வண்டுகளும் தும்பிகளும் நெருங்கிக் குடித்து அளவற்ற மகிழ்ச்சி கொண்டு காதிற் கினிமையாக இசை பாடிக்கொண்டு திரியும்; இன்னுஞ் சில மரங்களில் சுவை மிகுந்த கனிகள் பழுத்துக் கனிந்து மதுரசத்தை வடித்துக்கொண்டிருக்கும்; அந்த ரசத்தை மந்திகளும் வானரங்களும் வந்து அள்ளிக்குடித்துக் களிப்பினால் மரக்கிளைகளிற்றாவி விளையாடிக்கொண்டு திரியும்; இச்சோலைகளிலும் இந்நகரத்தைச்சூழ்ந்த மற்ற விடங்களிலும் அநேக ஈச்சமரங்கள் ஆகாயத்தை அளாவி வளர்ந்து காற்றினால் அவற்றின் மட்டைகள் அங்கு மிங்கும் அசைந்து கொண்டிருக்கும்; அவ்வாறசையுந் தோற்றமானது நபிநாயகமவர்களுக்கு பச்சைமயிற் றோகையாற் செய்யப்பட்ட விசிறிகொண்டு வீசுவதுபோலிருக்கும்; அம்மரங்களில் காய்த்துத் தொங்கிக் கொண்டிருக்கும் பசுங் காய்க்குலைகள் அநேகம் பச்சை யிரத்தினங்களைக் கோத்துச் செண்டாகக் கட்டித் தொங்கவிட்டதுபோலப் பிரகாசிக்கும்; அந்த ஈச்ச மரங்களில் கனிந்து பழுத்த பழங்களையுடைய குலைகள் எப்படி யிருக்குமெனில் மாணிக்கங்களாற் செய்து தொங்கவிடப்பட்ட குஞ்சம்போன்று அழகுடன் பிரகாசிக்கும்; இந்தக் கனிகளோ மகாமதுரம்பொருந்தியவைகள்; இந்தக் கனிகளில் ஒன்றை யெடுத்து ஒரு சமயத்தில் தின்றால் அவ்வாறு தின்றவர்க்கு நெடுநேரம்வரை பசியுண்டாக மாட்டாது; இந்தக்கனிகளைத் தினந்தோறும் வழக்கமாகத்தின்று வருவார்க்குத் தேகத்தில் எவ்வித பிணியும் வந்தணுகமாட்டாது; உடம்பில் மிக்க வன்மையுண்டாகும்; மனதில் தைரியம் அதிகமாக வுண்டாகும்; தலைமூளை பரிசுத்தமாகி நல்லறிவுண்டாகும்; சந்ததி விருத்திக் கேதுவாகும்.

இன்னும் அந்தச் சோலைகளுக்கு மத்தியில் மத்தியில் மதுரமான ஜலம் நிறைந்த பற்பல தடாகங்களும், கிணறுகளும், ஓடைக

ளும் குளிர்சி யுடையனவாய் அமைந்திருக்கும், அவைகளில், தடா கங்களிலே தாமரை, அல்லி முதலிய பல மலர்கள் அலங்காரமாக மலர்ந்து பல இரத்தின தீபங்க ளேற்றி வைத்ததுபோற் பிரகாசித் துக் கொண்டிருக்கும்; அம்மலர்களின்மேலே பல அன்னங்கள் தங்கி நித்திரை செய்துகொண்டிருக்கும். அவ்வாறு நித்திரை செய்யுந் தோற்றமானது பல மகான்கள் நீரின்மேலிருந்து தவஞ்செய்வதை நிகர்த்திருக்கும். இன்னும் இந்நகரத்தில் எண்ணிலடங்காத பல வள ங்களு. முண்டு.

வனச்சிறப்பு.

இந்தச் சிறப்புப்பொருந்திய மக்கமா நகரின் பக்கத்திலே முற் காலத்தில் 'அறபுக்கரை' வனமென்றொரு வனமிருந்தது. அந்த வனத்தின் வளமானது எவராலும் அளவிட்டுச் சொல்லமுடியாத வியல்பினை யுடையதாம். அதில், பேரீந்து, தேக்கு, கருங்காலி, வே ங்கை, சந்தனம், கோங்கு, ஆயில், கருவேல் முதலிய பல மரங்களட டர்ந்து வளர்ந்து மேகமண்டலத்தை யளாவிக் காற்றினுல் மேற்பாக த்திலுள்ள கிளைகளை அசைத்துக் கொண்டிருக்கும்: அவ்வாறு தலை யசைக்குந்தோற்றமானது, அவைகள், நபிநாயகம் சல்லல்லாகு அலை கிவஸல்ல மவர்களுக்கு வணக்கஞ் செய்வது போன்றிருக்கும்; அவ ற்றுள் சில மரங்களில் அழகிய புஷ்பங்கள் மலர்ந்து நாலாபக்கங் களிலும் வாசனையை வீசிக்கொண்டிருக்கும்; வேறு சில தருக்களில் சுவை மிகுந்த கனிகள் பழுத்துக் கனிந்து அவற்றினின்றும் மதுர மான ரசமொழுகித் தரையிற் புரண்டோடும்; பல வானரங்களும், நாய் நரிகளும், பக்ஷிகளும், வண்டினங்களும் அந்த ரசத்தை உண்டு களித்து மரக்கிளைகளிலும் மற்ற விடங்களிலும் தாவி சந்தோஷத்து டனே சஞ்சரித்துக் கொண்டிருக்கும். இவையன்றி இன்னும் அந்தக் காட்டின் மற்றொரு பக்கத்திலே பலவிதமான நோய்களை யெல்லாம் ஆச்சரியப்படும்படி போக்கக்கூடிய சஞ்சீவிகளாகிய பூண்டுகளும், கொடிகளும், செடிகளும், பலஜாதிப் புற்களும் அடர்ந்திருக்கும். இன்னும் அந்தக்காட்டின் இடையிடையில் கற்பாறைகளும், அப்பா றைகளி னிடையே பல சுனைகளும், கான் யாறுகளும், நீரோடைக ளும், மணல் மேடைகளும், மணல் வெளிகளும், முட்செடிகளடர்ந்த விடங்களும் பொருந்தியிருக்கும். இத்தகைய அந்தக் காட்டிலே, சிங்கம், யானை, புலி, கரடி, மான், மரை, குதிரை, ஒட்டகை, மாடு, எருமை, காண்டாமிருகம், முயல், எலி, ஆடு, முதலிய எண்ணிலடங்

காமிருகங்கள் கூட்டங்கூட்டமாக எங்கும் எப்பொழுதும்சஞ்சரிக்கும். சிற்சில விடங்களில், ஆடுகளையும் மனிதர்களையும் பிடித்து விழுங்கத் தக்க நீண்ட மலைப்பாம்புகள், நீண்டு பருத்த தென்ன மரங்களைப் போல சஞ்சரித்துக் கொண்டு திரியும்; நெருப்புக்கோழி, காட்டுக் கோழி, காடை, கௌதாரி, மாடப்புரு, மணிப்புரு, மயில், குயில், கூகை, ஆந்தை, செம்போத்து, காகம், கரிக்குருவி, முதலிய பல பக்ஷிகளெல்லாம், அக்காட்டிற் பழுத்த பலவகைக் கனிகளையும், வேறு புல்லரிசி, ரத்தினங்கள் முதலியவற்றையும் தின்று களித்து எங்கும் திரள் திரளாகக்கூடிப் பறந்து சஞ்சரித்துக்கொண்டு திரியும். எந்தக்காலத்திலும் அந்த வனத்தில், சிங்கங்கள் முழங்கும் ஆரவாரமும், யானைகள் வீறிடும் சப்தமும், புலிகள் கதறும் சப்தமும், குதிரைகள் செய்யும் குரலோசையும், பக்ஷிகள் செய்யும் இரைச்சலும், வண்டுகளின் ஒலியும், மரக்கிளைகள் காற்றில் அசைவதாலுண்டாகும் சப்தமும் கூடி எப்பொழுதும் கடல் முழக்கம் போல முழங்கிக் கொண்டிருக்கும். அந்தக்காட்டிலே, நாடோறும் பல வேடர்கள், அங்குள்ள மிருகங்களையும், பக்ஷிகளையும் பிடிக்கும் பொருட்டு வலைகளுடனும் பலவிதமான ஆயுதங்களுடனும் பதுங்கிப் பதுங்கிச் சஞ்சரித்துத் திரிவார்கள். அவர்களைக்கண்ட மிருகங்களும், பக்ஷிகளும் நடுக்கத்தை யடையும்.

கதை.

மேற்கூறிய சிறப்புப் பொருந்திய மக்கமா நகரத்திலே நபிநாயகம் றஸூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் திருவவதாரஞ் செய்து, இஸ்லாமார்க்கமானது எப்பொழுதும் நிலைபெற்றுவிருத்தியாகும்படி அஞ்ஞானிகளாகிய காபிர்களையடக்கி, அளவற்ற ஜனங்களுக்குகலிமாவுபதேசஞ்செய்து அவர்களை இஸ்லாமார்க்கத்திற்சேர்த்துப் பற்பல அற்புதங்களையெல்லாம் நடத்தி மிக்க புகழ்பெற்றுவந்தகாலத்தில் இதற்குமுன் சிறப்பித்துக்கூறிய அறபுக்கரை வனத்தில் ஒரு சமயம், மிகுந்த வேனிற்காலம் வந்தடைந்தபடியால், அங்குள்ள சுனை, பள்ளங்கள், நீரோடைகள், கான்யாறுகள் முதலியன வெல்லாம் ஜலமின்றி வறண்டு போயின; எங்கும் புற்பூண்டுகளும் தீய்ந்து போயின. எவ்விடத்திலும் ஜலமும் புல்லும் அகப்படுவது அருமையாயிருந்தது. அதனால், அவ்விடத்தில் வாசஞ்செய்த மிருகங்கள்; பக்ஷிகள் முதலிய பிராணிகளெல்லாம் கஷ்டப்பட்டு அங்கு மிங்குந் திரிந்தலைந்து கொண்டிருந்தன.

இப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள், சிவந்த சுருண்ட தலைமயிரும், நீண்டுயர்ந்த மூக்கும், சிவந்து விசாலித்த கண்களும், முறுக்கிவிட்டுத் திருகிய மீசையும், இடைகளில் மிருக மாமிசங்கள் தங்கி நீண்டிருக்கும் பற்களும், இருளைப்போன்று கறுத்த தேகமும், செருப்பணிந்த பாதங்களும், சங்குமணி யணிந்த கழுத்தும், இடியோசைபோன்ற குரலோசையும், மிகுந்த கொலைத் தொழிலையு முடைய ஒரு பயங்கரமான வேடன், கையில் வில்லும், அம்பும், வாளும், வலையும், கண்ணியும், தடியும் எடுத்துக்கொண்டு வலைகட்டி மிருகங்களைப் பிடிக்கும் பொருட்டுப் பதுங்கிப் பதுங்கி அங்கு மிங்கும் பார்த்துக்கொண்டு அக்காட்டில் வந்து சேர்ந்து, மிருகங்கள் வந்து எளிதில் தன் வலையிற் சிக்கிக் கொள்வதற்குத் தகுதியான ஓரிடத்தை ஆராய்ந்தறிந்து அவ்விடத்தில் வேட்டை கிடைக்க வேண்டுமென்று ஆண்டவனைத் தொழுது வலையை அடித்துவிட்டு மிருகங்கள் வரும் வழியை நோக்கி மறைவாக ஓரிடத்திற் பதுங்கி உட்கார்ந்து தலை நிமிர்ந்து வலையைப் பார்ப்பதும், மறைந்து கொள்வதுமாய்க் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது, அந்தக் காட்டில் மிகவும் அன்புள்ள குட்டியுடனும் கலைமானுடனும், இனமான்களுடனும் கூடி இனிதாக வாழ்ந்துகொண்டிருந்த ஒரு பெண்மானனது, புல்லும் ஜலமும் அகப்படாமல் பல விடங்களிலும் சென்று திரிந்தலைந்து, பசி மிகுந்து நாவறண்டு கண்ணிருண்டு மயங்கி ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றது. அப்படி நிற்கும்போது, அதற்குச் சமீபத்திலே மறைந்து நின்ற ஒரு சிங்கமானது வானிடிபோல முழக்கஞ் செய்தது. அந்தப் பயங்கரமான தொனியைக் கேட்டவுடனே அந்த மானனது, சிங்கம் தன்னைப் பாய்ந்து கொல்லுமென்று நினைத்து, "அம்மா இங்கு நின்றால், இந்தச் சிங்கத்திற் கிரையாவேன்" என்று மிகுந்த பயங்கொண்டு நெஞ்சங் கலங்கி அரை நிமிஷமும் அங்கே நில்லாமல் தன்னுடைய மறியையும், கலையையும், கூட்டங்களையும் விட்டுப் பிரிந்து அவைகளும், பயந்து ஒரு திக்கிலோட, தான் வேறொரு திக்கில் வாயுவேகமும் மனோவேகமும் பின்னிடும்படி விரைந்தோடிற்று. அப்படி யோடிய அந்த மானனது, பாறைக்கற்களிலும் பாலை வனங்களிலும் சென்று வெயிலால் விடாய்ப்பட்டு வியர்த்து இளைத்து முடிவாக மேற்கூறிய படி வேடன் வலைகட்டி யிருந்த விடத்திற்குச் சமீபத்திற் போய்

மனம் ஒரு நிலைப்படாமல் திகிற்பட்டு அங்கு மிங்குமாகத் திரிந்தலைந்து கொண்டிருந்தது.

அவ்வாறு அந்தச் சித்திரம் பொருந்திய பெண்மானானது தன் வலைக்குச் சமீபமாக வந்து திரிவதைக் கண்டவுடனே, அத்தகைய மிருகம் எப்பொழுது வரும் வருமென் றெதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கொலைத்தொழிலையுடைய வேடனானவன் "இன்றைக்கு என் குல தெய்வத்தின் கிருபையால் எனக்கு நல்ல வேட்டை கிடைத்துவிட்டது; நான் வலை யெடுத்துக்கொண்டு புறப்பட்டநேரம் நல்ல நேரம்; இந்த மானின் தசையானது மிகவும் உருசிகரமாயிருக்கும்; இதை எப்படியும் பிடித்து இதன் தசையை அறுத்துத்தின்று களிப்படைய வேண்டும்; இதைப்போன்ற புஷ்டியான மானை நாம் இதுவரை பார்த்ததில்லை," என்று களிப்பும் செழிப்பு முடையவனாய், உடனே யெழுந்து தன் குடிசைக்குட் புகுந்து, பின்னும் அந்த மானை அறுப்பதற்குரிய அரிவாள் முதலிய ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு அந்த மான் தன்னைப்பார்த்து மிருகமென்று நினைத்து ஏமாந்து போகும்படியான வேடந் தரித்து மிருகத்தைப்போல் நடித்து அந்த மானின் பக்கமாக மெல்ல மெல்ல ஒதுங்கி நடந்து அந்த மானைத் தந்திரமாக ஒதுக்கி வலையின் பக்கமாக நடத்தினான். அந்த மான் எவ்வளவோ புத்தியுடையதாயிருந்தும், தான் அடைந்திருந்த பசி யிளைப்பினால் மனமருண்டு வேடன் சூதை யுணராமல் பையப் பைய நடந்து சென்று மிகவும் அபாயகரமான அந்த வேடன் வலையிற் சிக்கிக்கொண்டது.

அவ்வாறு வழிதப்பி மதிமருண்டலைந்து வந்த மானானது, தன் வலையிற்சிக்கிக்கொண்ட மாத்திரத்திலே, வேடன் மிருகத் தோலால் தன்னுடம்பை மறைத்துவேடந்தரித்திருந்ததை உடனே நீக்கிவிட்டு யமனைப்போல வெளியேறி "இன்றைக்கு எனக்கு நல்ல அதிஷ்டம் பிறந்தது; நான் உத்தேசித்தபடியே இந்தக் கொழுத்த மானானது என் வலையிற் சிக்கிக்கொண்டது; இனி இதன் இறைச்சியையும் கொழுப்பையும் வயிறாரத் தின்பேன்; என் பெண்டுபிள்ளை சுற்றத்தார்களுக்கும் இறைச்சி கொடுத்து அவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்வேன்; இனி இதை விடுவேனோ?" என்று துள்ளிக்குதித்து அடங்கா மகிழ்ச்சி யுடனே அங்கம் பூரித் தோடிவந்து தாவி அதனைப் பிடித்துக் கால்களைச் சேர்த்துக் கட்டிச் சிறிதும் தாமதியாமல்

உடனே அதனை வெட்டிக் கொலை செய்தற்கு கத்தியைக் கையி லெடுத்தான்.

மான்வலைப் பட்டுப் புலம்புதல்.

அவ்வாறு அந்த வேடன் புலிபோற் பாய்ந்து அந்த மானைப் பிடித்துக் கொலைசெய்யத் தொடங்கவே, அந்த மான், உடல் பத றிக் கதறிப் பெருமூச்சு விட்டுப் பயந்து, "ஐயோ! நான் இந்தக் கா லன் கையில் அகப்பட்டேனே? இன்னும் சிறிது நேரத்தில் என் உயிர்போகப் போகின்றதே; நான் பசியினால் களைத்து, தாகத்தால் நாவறண்டு என் அருமையான குட்டியையும், கலையையும், இனங்க ளையும் பிரிந்து, வழிதப்பிப் பலவிடங்களுக்கு மோடிக் களைத்து வந் தேனே; இவ்வித கஷ்டங்களை யெல்லா மடைந்து முடிவில் இந்தக் காலன் கையிலகப்பட்டேனே; இனி இவன் என்னைவிடப் போகின் றானா! ஐயோ நான் என்ன பாவஞ் செய்தேன்; நான் அக்கிரமமாகக் குடியானவரின் பயிரை யழித்தேனோ; உயிர்வதைகள் செய்தவர்க்கு உதவி செய்தேனோ? குட்டிக் கிரங்கிப் பால் கொடாமல் அதனை வரு த்திக் கொடும்பழி செய்தேனோ? கொலை களவு முதலிய பாவங்க ளைச் செய்தேனோ? சத்தியந் தவறினேனோ? சொன்ன வாக்கு மாறி னேனோ? இன்றைக்கு நான் யார்முகத்தில் விழித்தேனோ? நான் எழுந் தநேரம் நல்லநேரமில்லை; அந்தக் கொடியநேரத்தின் பலன் இப்பொ ழுது சித்தியாகிவிட்டது; ஐயோ! நான் மறியைப் பிரிந்து வந்தே னே; அது மிகவும் பசித்திருக்குமே; அதற்குப் பாலூட்டுவா ரெவ ருமில்லையே; அது நான் வருவேன் வருவேனென்று வழிபார்த்துக் கொண்டிருக்குமே; என் கலையும் என்னைத்தேடித்தேடி மயங்குமே; என்னுடைய இனங்களெல்லாம் என்னைக் காணாமல் வருந்துமே; நான் இவ்வாறு வேடன் கையிற் சிக்கி யிறந்தேனென்பதை என் மறி யறிந்தால் வருத்தஞ் சகிக்காமல் இறந்து போய்விடுமே; என் கலையும் இதனை யுணர்ந்தால் உயிர் வைத்திராதே, ஐயோ! இந்த ஆபத்தான காலத்தில் எனக்கு உதவி செய்வா ரொருவருமில்லையே; இந்த வேடன் என்னை இப்போது மனமிரங்கி சிறிதுநேரம் வரை விடுவானாகில் என் குட்டிக்குப் பால் கொடுத்துவிட்டாவது திரும்பி வருவேனே; இவன் கொலைத் தொழிலையே பெரிதாகக்கொண்டு திரிபவனாச்சுதே; இந்தக் கொடும்பாவியா மனமிரங்கி நம்மை விடு வான்; நாம் எவ்வளவு இரக்கமான வார்த்தைகளை யுரைத்தாலும் அவைகள் இவனுடைய செவிக் கேறமாட்டாவே; என் மறியை நினை

க்கும்போது என்னுடைய உடலெல்லாம் பதறுகின்றதே, இனி நாம் எவ்வளவு புலம்பி யழுதபோதிலும் ஆகப்போவதொன்று மில்லை; இந்தச் சமயத்தில் எந்தப் புண்ணியவான்களாவது வந்து எனக்கு உதவி செய்து என் மனக்கவலையை நீக்கமாட்டார்களா; ஐயோ! நான் காலன் கையி லகப்பட்ட வுயிர்போல் கலங்குகின்றேனே; இனி மேலும் எனக்குப் பிழைக்கு மார்க்க மூண்டாகப் போகிறதா?" என்று பலவாறு எண்ணுது மெண்ணிப் புலம்பி யழுதது.

நபிநாயக மவர்கள் மானுக்கிரங்கிப் பிணை யாகுதல்.

மேற் கூறியபடி அந்த ஞான மிகுந்த மானுனது, வேடன் கையிற் சிக்கிப் பயந்து சாவைக் கருதிப் புலம்புங்காலத்தில் அது செய்த தவப்பயனுல் அதனுடைய இடரெல்லாம் நீங்கி அந்த மானும், மூடனுகிய வேடனும் நற்கதி யடையும்பொருட்டு, எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பைச் செலுத்தக் கூடியவரும், மகா புண்ணிய சீலரும், ஆண்டவனு லனுப்பப்பட்ட திருத்தூதரும், மகா சிறப்புப்பொருந்திய மேன்மையாகிய இஸ்லாமார்க்கத்தை நிலை நிறுத்திக்கொண்டு வந்தவரும் தங்களுக்கிறங்கிய புருகானுல் அலீமென்னும் வல்லமாகிய மேன்மையாகிய வேதத்தைக்கொண்டு ஷறஹைறதரிபடுத்தி இஸ்லாமார்க்கத்தை விருத்தி யடையச் செய்தவரும், என்று மழியாப் புகழாளருமாகிய மூகம்மது முஸ்தபா அஹ்மது முற்தலா றசூல் சல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் திடுமென அங்கே வந்தார்கள்.

அப்படி அவர்கள் வ் தவுடனே ஆபத்தி லகப்பட்டு மரண சந்தர்ப்பத்திலிருந்த அந்த மானுனது, அவர்களைக்கண்டு, "எல்லோரையும் அன்புடனே ஆதரித்தருளுகின்ற கருணை வள்ளலாகிய நபி நாயகம் வந்தார்கள்; இவர்களால் நம்முடைய குறை தீரும்," என்று மனதிற் சிறிது தேறுதலடைந்து, பக்தியுடனே அவர்களை நோக்கி ஸலா முரைத்தது. உடனே நபிநாயகமவர்கள், அந்த சலாமுக்கேற்ற பதிலுத்தரம் மொழிந்து பின்னர் அது வலையிற் சிக்கி வருந்துவதை யுணர்ந்து அதனை நோக்கி, "பிணைமானே! நீ சுயேச்சையாய்க் காட்டிற் சஞ்சரித்துக்கொண்டு திரிவதை விடுத்து, ஜாதியிற் மூழ்ந்தவனுகிய இந்த வேடனுடைய வலையில் வந்து எதனுற் சிக்கிக்கொண்டாய்"? என்று வினவினுர்கள்.

நபி நாயகமவர்கள் இவ்வாறு வினவியவுடனே ஆபத்திற் சிக்கியிருந்த அந்த மானனது சிறிது மனக்கலக்கம் நீங்கி அவர்களைப் பார்த்து, "கருணை வள்ளலே! நான் இன்றைக்குப் புல்லுந் தண்ணீருமகப்படாமல் பசித்துக் களைத்துத் தாகவிடாய் கொண்டு பல விடங்களினுந் திரிந்தலைந்து பின்னர் ஓரிடத்தில் மனக்கலக்கத்துடனே என் இனங்களுடன் தங்கி நின்றேன். அப்போ தங்கே பக்கத்தில் ஒரு சிங்கம் நின்று பயங்கரமான முழக்கஞ்செய்தது; அதைக் கேட்டவுடனே திடுக்கிட்டுப் பயந்து, என் இனங்களெல்லாம் ஒரு பக்கத்திலோட நானொரு பக்கத்தில் வழிதவறி யோடிப் பாலை வனங்களிலும் கற்பாறைகளிலும், முட்களடர்ந்த விடங்களிலும் திரிந்தலைந்து காலோய்ந்து கண்ணிருண்டு மயங்கிக் கலங்கி இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தேன்; என்னைக் கண்டவுடனே இந்த வேடன் தந்திரமாக ஒதுக்கி இந்த வலையிற் சிக்கவைத்துப் பிடித்துக்கொண்டான்; அன்றியும் என்னைக் கொலை செய்யவும் கருதி யிருக்கின்றான்; இந்தச் சமயத்தில் என்னை ஆதரிக்கும் தந்தைபோலத் தாங்கள் வந்தீர்கள்; சிறந்த கன்னி மயிலாயிருந்த காவிமே! என்னிரு கண்மணி போன்றவரே! சென்னிதனில் போர்வை தரித்திருந்து, ஜிபுரியிலைக்கண்டு காட்டினவரே! நீரோ எல்லா ஜீவராசிகளிடத்தும் கருணை செலுத்தத் தக்கவர்; நீர் அநேகம் பிராணிகளை யெல்லாம் ஆதரித்துக் காப்பாற்றியிருக்கின்றீர்; முன்னே மக்கமா நகரிலுள்ள அறபிகளில் ஒருவனிடத்திலிருந்த ஒட்டகமானது ஒரு சமயத்தில் ஆபத்தை யடைந்து அதனைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இரவிலேயே உம்முடைய மாளிகையை யடைந்து விடிந்த பின்பு உம்மைக்கண்டு உமக்கு ஸலாம்சொல்ல, நீர், அதனை நோக்கி, 'எங்கு வந்தாய்? உன் மனதிலிருப்பதென்ன?' என்று வினவினீர். அதற்கந்த ஒட்டகை உம்மை நோக்கி, 'ஈகையிற் சிறந்த நாயகமே! என்னை ஆதியில் ஒரு அறபி விலைக்குக் கொண்டான்; அவன் அவ்வாறு என்னைக் கொள்ளுங்காலத்தில் அவனுக்குக் கொஞ்சமுந் திரவியங் கிடையாது; ஜீவிப்பதற்குத் தகுந்த தொழி லேதுமில்லை; இந்த நாட்டிலே அவன் கூலிவேலை செய்து ஜீவித்து நாட் கழித்து வந்தனன்; அவ்வாறு கூலிவேலை செய்து வரும்போது என் முதுகில் தினந்தோறும் பொதி யெடுத்துப் போட்டுக் கூலிக்கு ஆங்காங்கே கொண்டுபோய்ச் சேர்த்துப் பலரிடமும் கூலி வாங்கி, அந்தக் கூலிப்பணத்தில் தினந்தோறும் கொஞ்சம் மீதிப்படுத்தி அதன் மூலம் பணஞ் சேர்த்துக் கொஞ்சம்

மொத்தமான பணஞ் சேர்ந்தவுடன் அவன் அந்தக் கூலித் தொழிலைவிட்டுச் சொந்தத்தில் வரும்படி வரத்தக்க ஒரு தொழிலைச் செய்தனன்; அதனால் மேலும் கொஞ்சம் பணஞ் சேர்ந்தது. ஆண்டவன் கிருபையால் பின்னர், ஐந்தாறு ஒட்டகைகள் என் மூலம் உற்பத்தியாய் விருத்தியடைந்தன. அப்படி அவைகள் விருத்தியடைந்தவுடனே, அவைகளைக்கொண்டு கணக்கில்லாத பொதிகளை யெடுத்து வியாபாரஞ் செய்து மேன்மேலும் விருத்தி யடைந்து அதிகப் பணம் சம்பாதித்து அவன் பெரிய வாணிபக்காரனானான். இப்படி அவன் என் மூலம் அதிகரித்த பணக்காரனாகியும் என்மீது விசுவாசம் பாராட்டுவதை விடுத்து, நான் கிழமாய்ப் போய் விட்டபடியால் இன்று என்னைக்கொண்டுபோய் இந்த மக்க நகரத்தின் கடைவீதியிலே அறுத்து என் தசையை விற்று அதன்மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு வரும்படி தன் வேலைக்காரருக்குக் கட்டளையிட்டான்; அதனால், நான் உயிர் போகப் போகின்றதே யென்று வருந்தி இந்த ஆபத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி உம்மிடம் வந்தேன், என்று விசனித்துக் கூறிற்று. அதைக் கேட்டவுடனே நீர், கரத்தை நீட்டி அதன் முதுகைத் தொட்டுத் தடவி பிஸ்மில்லாகிர் றஹ்மாநிர் றஹீமென்று ஓதி யூதினீர்; உடனே அது தன் விருத்தாப்பியம் நீங்கி இளம்பிராய முடையதாய் வேற்றுரு வடைந்து சந்தோஷத்தால் மனங் குளிர்ந்து உம்முடைய திருப்பாதங்களைப் பணிந்தது; அந்தச்சமயத்தில் அந்த அறபி ஒட்டகையைத் தேடி வந்தான்; அவனைக்கண்டு நீர் எங்கு வந்தாயென்று வினவ, அவன் ஒட்டகையைத் தேடி வந்தேனென்று சொல்ல, நீர் அங்கு கிழப்பருவம் நீங்கி நின்ற ஒட்டகையைக்காட்டி இதுதான் உன்னுடையது; இதனை ஓட்டிக்கொண்டுபோ என்று சொல்ல, அவன் அந்த ஒட்டகையைப் பார்த்து அது வேற்றுரு வடைந்திருந்ததால் அதனைத் தன்னுடைய தன்றென நினைத்து, 'நாயகமே! இது யாருடையதோ! இதனை நான் ஓட்டிக்கொண்டு போவது தகுதியாகாது,' என்று சொல்ல, நீர் ஒட்டகையை நோக்கி நடந்ததைக் கூறும்படி கட்டளையிட்டீர்: அந்த ஒட்டகை நடந்ததை அவனுக்குக் கூறிற்று. அதைக் கேட்டவுடனே அவன் உள்ளம்பூரித்து மகிழ்ந்து, உம்மை நோக்கி, 'றஸூலே; ஆண்டவனா லனுப்பப்பட்ட திருத்தூதரே; இன்று முதலாக நான் கெட்ட குபிரை விட்டேன்; எனக்குக் கலிமாவை ஓதியருளும்,' என்று கூற, அவ்வாறே நீர் கலிமா வுபதேசஞ் செய்தீர்;

172066

அதன்மேல் அவன் அஞ்ஞானத்தினின்றும் நீங்கி இஸ்லாமாகி உம்மைப் பல தடவை வணங்கி அந்த ஒட்டகையை ஓட்டிக்கொண்டு போய் வீட்டிற் சேர்த்து அதன்மீது விசுவாசமுடையவனுய் அதனைக்காப்பாற்றி வாழ்ந்து க்ஷேமமுற்ருன்; அந்த ஒட்டகையும் உம்முடையகிருபையால் நெடுங்காலம்சந்தோஷத்துடனேஜீவித்திருந்தது.

இன்னும் உம்முடைய மகிமைகள் அநேகம்; அன்று வெற்றியுடனே மதியை வரவழைத்தீர்; வெண் தலையைப் பேசவைத்தீர்; வெறிகொண்டு தாயை அடித்த மகன், தன்கையை அறுத்துவிட நீர் அவன் கரத்தை அன்றுபொருத்தி அவனுக் கிதத்தைச் செய்தீர்; ஆலத்தை அமுதாக வுண்டீர்; இன்னும், ஊரிலுள்ள ஒருவன், உமக்கு விருந்திட வேண்டுமென் ருசைவைத்து விருந்து சொல்லிவிட்டுக் கறிசமைக்கும் பொருட்டு ஒரு ஆட்டைப் பிடித்தறுக்க, அச்சமயத்தில் அவன் புத்திரர்களுள் கலகமுண்டாகி இளையவனை மூத்தவன் அறுத்துக் கொன்றுவிட, அதைநீர் உணர்ந்தால் விருந்துண்ணவர மாட்டீரென்று நினைத்து அவனும், அவனுடைய மனைவியும் அறுபட்ட அந்தப்புத்திரனை மறைத்துவிட்டு அச்சங்கதியை யாருக்கும் வெளிப்படுத்தாமல், கறியும் உணவும் சமைத்துக் கொண்டுஉம்மை அன்புடனே அழைத்துப்போய் உண்ணும்படிவேண்ட, நீர் அவர்கள் விருப்பத்தின் படியே உட்கார்ந்து உண்ணத் தொடங்கும்போது, 'உங்களுக்குச் சிறுவனிருந்தால் என்கூட விருந்துண்ணும்படி அவனை யழையுங்கள்,' என்றுசொல்ல அப்போது அங்கே இறந்த புத்திரனைத்தவிர வேறுசிறுவ னில்லாதபடியால், அவனுடைய மனைவி தன் புத்திரனிறந்ததைச் சொல்ல மாட்டாமல் மனங்கலங்கி வருந்தித் தியங்கி நிற்க, அவள் முகவாட்டத்தைக்கண்டு நீர், 'பொருந்திய தவத்தைச்செய்த பெண் கொடியே! நான் பிள்ளையிருந்தால் அழையென்று சொன்னதற்கு நீ இவ்வாறு முகவாட்டத்துடன் மனங்கலங்குவதற்குக் காரணமீயாது?' என்று வினவ, அதற்கவள், 'எனக்கிரண்டு புத்திரருண்டு; அவர்களுள் இளையவன் தான் தாங்கள் விரும்பிய சிறுவன்; அவன் இறந்து போய்விட்டான்; அதுபற்றித்தான் வருந்துகின்றேன்,' என்றுரைக்க, நீர், 'அவன் மாண்டது இன்றைக்குத்தானே?' என்று மீண்டும் வினவ, அந்தப் பெண்கொடி, 'நாயகமவர்களே! அவன் இன்றுதானிறந்தான்; இன்று உமக்குக் கறி சமைக்கும் பொருட்டு என் நாயகர் ஒரு ஆட்டைப்பிடித்தறுத்தார்; அப்போது என்னுடைய இரண்டு புத்திரரும் பார்த்தி

ருந்து அதன்பொருட்டுக் கலகமிட்டுக்கொண்டு அவர்களுள் மூத்த வன், இளையவனைத் துடிக்கும்படி வதைசெய்துவிட்டான்; அதனையு ணர்ந்தால் நீர் விருந்துண்ண வரமாட்டீரென்று நினைத்து இறந்த பிள்ளையை இரகசியமாக மறைத்து வைத்திருக்கிறோம்,' என்று சொல்ல, நீர், 'நடந்தது நல்ல காரியந்தான்,' என்றதிசயித்து, மீண் டும் அவளை நோக்கி, 'தருமகுணத்திற் சிறந்த பெண்ணே! இக்காரி யம் எல்லாம் வல்லவனாகிய ஆண்டவன் கட்டளைப்படி நேர்ந்தது; இதன்பொருட்டு நீ வருந்த வேண்டாம்; விரைவில் இறந்தபிள்ளையை இங்கே எடுத்துக்கொண்டுவா,' என்றுரைக்க, அவள் உடனே அவனை யெடுத்துக்கொண்டு வந்து உம்முடைய சமுகத்தில் வைக்க, அப் பொழுது, நீர், எல்லோரையும் ஆளுகின்றவனாகிய ஆண்டவனைத் தொழுது அறுபட்ட அந்தச் சிறுவனுடைய கழுத்தைப் பொருத்தி, சிரசிலிருந்து காலளவும் உம்முடைய கரத்தால் தடவ, அந்தப்புத்தி ரனுடைய அறுபட்ட கழுத்துப்பொருந்தி அவனுடைய தேகத்தில் உயிர்வந்து புகுந்து அவன் உடனே தூங்கி யெழுந்தவனைப்போலச் சந்தோஷித்தெழுந்து உம்மை வணங்கினான். இந்த ஆச்சரியமான செய்கையைக் கண்டவுடனே அந்தப் பெண்கொடி, மிகுந்த பத்தி யுடனே உமக்கெதிரில் நின்று, 'எங்கள் குடிக்கெல்லாம் நாயக மான றஸூலே! எங்கள் கண்ணினுள்ளிருக்கின்ற மணிபோன்றவரே! பத்தரைமாற்றுப் பசும்பொன் போன்றவரே! எங்களை ஆண்டவரே! தாவி அறுவிலேறும் செய்யிதுவே! உயர்ச்சி பொருந்திய புலியை ப்போன்ற வீரச்செய்கையை யுடையவராகிய அலியென்பவரின் மா துலரே! சூது பொருந்திய காபிர்களை வென்ற பெருமானே! சதைக் கட்டியை இப்பூவுலகத்திலே பெண்ணாக எழுப்பின சித்தரே! பரிசுத் தரே! நீர் அவ்வாறு பெண்ணை யெழுப்பினது போலவே இறந்து போன என்னுடைய சிறுவனையும் எழுப்பித்தந்து எங்களைச் சந்தோ ஷசாகரத்தில் மூழ்கச்செய்தீர்; அழகுபொருந்திய நபிகள்நாயகமே! இனி எங்கள் சிறுவனோடிருந்து அமுதுண்ணுவீராக, என்று சொல் லிப் பலவாறு துதித்து உம்மைவணங்க, நீர் அவள் வேண்டுதற் படியே அந்தச் சிறுவனுடனும் மற்றவர்களுடனும் இனி தமர்ந்து உணவருந்தி அவர்களை மகிழ்வித்து வந்தீர்; இப்பேர்ப்பட்ட கிருபை பொருந்திய செய்கைகளையுடைய உமக்கு என்னிடர் தீர்ப்பது பிர யாசை யாகுமோ? கிருபைக்கடலாகியவரே! நான் இந்தக் கடல் சூழ் ந்த பூமியில் நெடுங்காலமாக மலடாயிருந்து, அபுரூபமாகப் புதை யல் கண்டெடுத்ததுபோல சமீபகாலத்திற்றான் ஒரு குட்டியைப்பெ

ற்றெடுத்தேன்; அந்தக் குட்டிக்கு இன்னும் தழைத் தின்னத் தெரியாது; அது என்பால் குடித்தே வளர்ந்து வருகின்றது; அந்தக் குட்டியும் என்கலையும் இனமும் எங்குச் சென்றனவோ? நான் ஒருகாலும் அவைகளைப் பிரிந்ததே யில்லை; நீர் கிருபைசெய்து சிறிதுநேரம் வரை இவனிடத்தி லிருந்தும் என்னை விடுதலைசெய்து விடுவீராகில், நான் விரைவிற்சென்று, என்னுடைய இனங்களைக்கண்டு நடந்தசெய்தியைக்கூறி மறிக்கும்பால் கொடுத்து அதனைத் தேற்றிவிட்டு மீண்டு சத்தியந் தவறாமல் இந்த வேடுவனிடத்திலே வந்து சேருவேன்; அதன்மேல் என்னை இவனிஷ்டப்படி செய்துகொள்ளட்டும்; நான் சென்று என்னினங்களுக்குச் சங்கதிதெரிவித்து வராவிட்டால் அவைகள் என்னைத் தேடித்தேடிக் காணாமையால் வருந்தி அந்தத் துக்கஞ் சகிக்கமுடியாமல் இறந்துபோம்; நான் இறந்துபோவது மல்லாமல் என்னுடைய இனங்களும் மடிந்துபோவது நியாயமாகாது: வேதத்தை முற்றுமுணர்ந்தவரே! விண்ணவர்க்கரசானவரே! விரும்பியவர்களின் துன்பங்களை நீக்கி அவர்களை யாண்ட வள்ளலே! இந்த அடிமைக்கும் இப்பொழுது கிருபைசெய்து என்னைக் காப்பாற்றுவீராக,' என்று பலவாறு சஞ்சலப்பட்டு அவரைத் துதித்துத் தனக்குதவி செய்யும்படி அவரை வேண்டிற்று.

மான் இவ்வாறு சஞ்சலப்பட்டுக்கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடனே, கருணை வள்ளலாராகிய நபிநாயக மவர்கள் மனதிரங்கி அதன் விருப்பத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று கருதி வேடனிடம் இதமான வார்த்தை கூறி மானை விடுவிக்கலாமென்று அவன் பக்கமாகத் திரும்பினர். அப்போதந்தக் கொடிய வேடன், பருத்துக் கறுத்த தேகமும், நீண்டகால்களும், திரண்ட கைகளும், இரும்புக் கம்பிகளைப்போன்ற கடினமான விரல்களும், ஊடேநரைத்துச் சுருண்ட செம்பட்டை மயிரும், சிறியகூனும், வளைந்து உதடுகளுக்குமேல் வெளியேறி நீண்டு கறுத்த பற்களும், கூடிய புருவங்களும், சொறித்தேமலும், கோபப் பார்வையும், குறுகிய கழுத்தும், நீண்டு வளர்ந்து முடிக்கப்பட்ட தாடியும், சிவந்த கண்களும், பெருத்த மூக்கும், இரத்த மொழுகிக்காய்ந்த தேகமும், மதுமயக்கமும், தலைக்கிறுகிறுப்பும், மரவுரிதரித்த இடையும், பசிய குழைகளைச் செருகிய இடைவாளும், செருப்பணிந்த பாதங்களும், விரித்த தலையும், கையில் வில்லும் அம்பும், முதுகில் அம்பறாத் தூணியும், பற்கடியு முடையவனாய் நின்றான்.

அப்படி நின்ற வேடுவனை, கருணைக் கடலாகிய நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கள் பார்த்து, அன்புடனே அழைத்து அவன் முகத்தைநோக்கி, "பருத்துத் திரண்ட புயங்களை யுடைய வேடனே! இந்தமானை நீ கொல்லாமல் இச்சமயம் விட்டுவிடு; அது போய் மறிக்குப் பால்கொடுத்து வரட்டும்," என்று இனிதாகக் கூறினார்: அந்தச்சமயத்தில், மான், "ஐயோ! இந்த வேடனோ மிகவுங் கொடியபாவி; அஞ்சா நெஞ்சை யுடையவன்; காட்டிலே வாழ்கின்ற நீசன்; கடிய குபிராளன்; மகா வஞ்சனை யுள்ளவன்; மிகவும் மூடன்; கொடிய புலி நகத்தைப்போன்ற கைகளை யுடையவன்; கொலைத்தொழில் செய்வதற் கஞ்சாதவன்: ஆண்டவனை யறியாத கண்களையுடையவன்; அவனைச் சிறிதும் நினையாத மனதை யுடையவன்; இப்பேர்ப்பட்ட கொடும்பாவி இப்போது என்னை வலையிற் சிக்கவைத்துப் பிடித்துக்கட்டிக் கொலைசெய்யக் கருதி யிருக்கின்றான்: இவ்வாறு கருதியிருக்கும் இவனுடைய செவிக்கு, நம் நாயகமவர்களுடைய சொற்கள் ஏறப்போகின்றனவா? ஐயோ! இவன் இவருடைய சொல்லுக்கிணங்கி நம்மை விடுவானோ விடமாட்டானோ? நம்முடைய கதி யாதாகுமோ? நம்முடையகுட்டி என்னகதியை அடையுமோ?" என்று மனங்கலங்கிப் பலவாறு சிந்தித்துக்கொண்டு, 'வேடன் என்ன சொல்லுகிறானோ கேட்போம்,' என்று அவனுடைய வார்த்தை வாயினின்று எப்பொழுது வெளிப்படுமென்று எதிர்பார்த்து நின்றது.

இப்படி மான்நிற்க, முன்கூறியபடி நாயகமவர்கள் கூறியவார்த்தைகளைக் கேட்டவுடனே அந்த வேடன், அவரை நோக்கி, "பண்டைக்காலத்தில் புதைத்து வைத்த திரவியத்தைக் கண்டெடுத்தது போல நான் இப்போது இங்கே வலைகட்டி இந்தமானைப் பிடித்தேன்: அவ்வாறு பிடித்த இதனை விட்டு விடுவது அழகாமோ? முன்னே வைத்துண்ணும் உணவை உதைத்துத் தள்ளிவிட்டு ஊருக்குள்ளே பிச்சைவாங்கச் செல்வாருண்டோ? நான் இந்தக்காட்டில் பலநாளாக இதனைக்கண்டு எப்படியும் பிடிக்கவேண்டுமென்று முயற்சி செய்து இன்று பிரயாசைப்பட்டுப்பிடித்தேன்;அப்படி அருமையாகப்பிடித்த இதனை இனி விட்டு விடுவேனோ? இதை விட்டு நான் வேறு பிராணியைப் பிடிக்க முயற்சி செய்வேனாகில், மேற்கூறியபடி முன்னிருக்கும் உணவை உதைத்துத் தள்ளி ஊருக்குள் பிச்சை யெடுக்கச் செல்பவன்போலாவேன்" என்று கூறினான். இதைக்கேட்டு நபி நாயகமவர்கள், "இது மீண்டும் உன்கைக்கு வராமற் போவதாயிருந்தா

றுனே நீ இதனை விடுவதற்குச் சந்தேகப்படவேண்டும்; இதுதான், கன்றுக்குப் பாலூட்டித் திரும்பி வருமென்று நான் சொல்கின்றேனே; அவ்வாறு சொல்லியும் நீயேன் இசையமாட்டேனென்கிருய்? இது அவசியம் சொன்ன சொல் தவருமல் போய் மறிக்குப் பாலூட்டி விட்டுத் திரும்பி வரும்; நீ சிறிதும் சந்தேகப்படாமல் என் சொல்லை நம்பி இதனை விரைவில் விட்டுவிடு; நீ, இந்த மான் வருந்தத் தக்க வார்த்தைகளைக் கூறவேண்டாம்; என்னுடைய வார்த்தைப்படி செய்வாயானல் உனக்கு நன்மை யுண்டாகும்," என்று சொன்னார்கள்.

இவ்வாறு நாயகமவர்கள் கூறியும் அந்தக் கொலைகாரனுகிய வேடன் மனதிரங்காமல், "நீர் இந்தமானை விட்டு விட்டால் திரும்பி வந்துவிடு மென்று சொல்கின்றீர்; இந்த ஏழை வேடன் வெறுங்கையனுய்ப் போகவேண்டு மென்று நினைத்தோ நீர் இவ்வாறு சொல்கின்றீர்? இந்த வனத்திலுள்ள வேடுவர்களிலே நான் மூடனென்று நினைத்து நீர் இவ்வாறு சொன்னீர் போலும்; எங்கள் குலத்தவர்கள் இந்த வனத்தில் குடியேறிய அந்நாள் முதலாக இதுவரையிலும் எங்கள் கையிலகப்பட்ட மிருகங்களை விட்டுவிடச் சொன்னவர்களில்லை; வேடுவர்களுக்கு மிருகங்களைப் பிடிப்பதும், அவற்றைக் கொன்று தின்பதுமே உரிய தொழிலாகும்; இது தவிர வேறு தொழில் கிடையாது; எங்களுக் கிதுவே ஜீவனம்; அப்படியிருக்க, உம்முடையசொற்படி இந்த மானை விட்டுவிடுவேனுனல், நான் வேறெந்தத் தொழில்செய்து ஜீவிப்பேன்? அப்படியே உம்முடையசொல்லை நம்பி இதனை விட்டுவிடுவேனுனல் இது பழையபடியும் திரும்பி வருவது என்ன நிச்சயம்? ஆதலால், நீர் இதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாமல் இது எனக்குரிய தொழிலாமென்று நினைத்து இப்பொழுதே இங்கு நில்லாமல் விலகிப்போவதுவே சரி," என்று சொல்ல, நபிநாயகம் அவனை நோக்கி, "வேடுவனே! உனக்கு மிருகங்களைப் பிடித்துண்டு ஜீவிப்பதே தொழிலா யிருந்தாலும் இந்த ஒருமானை விடுவதால்உன்னுடைய ஜீவனங் கெட்டுப்போய் விடமாட்டாது; எல்லாவுயிர்களுக்கும் உணவளிக்க இறைவனெருவ னிருக்கின்றுன்; அவனருளால் எவரும் உணவுண்டு ஜீவிப்பார்களே யன்றிப் பட்டினி கிடக்க மாட்டார்கள்; ஆதலால் என் சொல்லை உறுதியாக நினைத்து இந்த மானைவிட்டுவிடு," என்று கூறினர். அப்போது வேடன் அவரைநோக்கி, "வாசனை பரிமளிக்கின்ற மலர் மாலையை யணிந்த திருப்புயங்களை

யுடையவர்களே! இந்த மானை உம்முடைய சொற்படி நான்விட்டால், இது நிச்சயமாகத் திரும்பி வருமோ?" என்று வினவினன். அதற்கு நாயகமவர்கள் அவனை நோக்கி, "கானவனே! இந்தமான் சென்று என்சொற்படியே மறிக்குப் பாலூட்டி நிச்சயமாகத் திரும்பிவரும்; அப்படி இதுவரும் வரையில் இதற்குப் பதிலாக நான் பிணையாகின் றேன்; இது, திரும்பி வந்தபின் உன்னைவிட்டுப் போகின்றேன்," என்று கூறினர். அதைக்கேட்டு வேடன், "முகம்மது நபியே! ஆண் டவனுடைய திருத்தூதரே! உம்முடைய சொற்படி இந்தமான் திரு ம்பி வராத பக்ஷத்தில் நான் உம்மை விடமாட்டேன்," என்று கூறினன்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே, மானனது நபிக நாயக மவர்களை நோக்கி, "எங்கள் நாயகமே! நீர் எனக்குப் பிணையாகிறே னென்று கூறியும் இந்தவேடன் உம்முடைய மகிமையை யுணராமல் ஏதேதோ கூறுகின்றான்; நீர் எனக்காகப் பிணைப்படவேண்டாம்; எழுந்தருளும்; அரசே! உம்முடைய மகிமையை இந்தப் புலையனறி வானே? நன்றியுள்ள நாயகமே! நீர் இன்று எனக்குப் பிணையாக நிற் கத் தகுதியாமோ? நான் என்னபாவஞ் செய்ததனாலோ இந்தக் கே வலமான மான் பிறப்பாகப் பிறந்தேன்; அப்படியிருக்க உம்மை என க்காகப் பிணைகொடுத்தால் இன்னும் எனக்கென்னபாவம் வந்து சே ருமோ; இப்பாவம் எளிதாகத் தீருமோ? நான் என்தலை விதிப்படி யே இன்றைக்கு இந்த இரக்கமற்றவேடன் வலைக்குள்ளாய் இவன் கையிற் சிக்கினேன்; இனி எதுவும் என் விதிப்படியே நடக்கும்; இவன் என்னைக் கொன்றாலும்சரி, விட்டாலும்சரி; நீர் எனக்காக இந்த வேடனிடம் தாழ்மையான வார்த்தைகள் கூறிப் பிரயாசைப் படவேண்டாம்; நீர் இவ்விடத்தை விட்டெழுந்தருளும்," என்றுகூறி ற்று. அதைக் கேட்டவுடனே, நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கள், அந்தமானை நோக்கி, "பிணையே! உனக்கு நான் நிச்சயமாகப் பிணையே; நான் உன்னைக் காணவிட்டாலும் பே சாமற் போய்விடுவேன்; வேடன் உன்னைப் பிடித்துக் கொலை செய்ய ப்போவதை நான் நேரில் பார்த்துவிட்டேன்; இவ்வாறு பார்த்தபின் பும் உன்னை இவ்வாபத்தில் விட்டுச் செல்வதற்கு என்மன மிசையு மோ? அப்படி விட்டுச்சென்றால் என்னுடைய கிருபைத் தன்மை க்கு அது அழகாமோ?," என்று கூறினர். அதைக் கேட்டவுடனே மான் மனங்குளிர்ந்து, ஆகிறத்து நபியே! நபிகள் நாயகமே! ஆண்

டவனாலனுப்பப்பட்ட திருத்தூதரே! எங்கட் கிறைவரே! உம்முடைய அருளும் ஈகையும் பரோபகாரமும் ஜீவகாருணியமும் எவர்க்குவரும்; உம்முடைய திருமுகத்தைக் கண்டாலும் எப்பேர்ப்பட்ட பாபிகளும் அப்பாவங்கள் தீர்ந்து மிகுந்த புண்ணிய முடையவராவார்கள்; அவர்களுக்கு எல்லா நன்மையு முண்டாகும்; உம்முடைய பெருமைக் குணங்கள் என்னால் அளவிட்டுச் சொல்லி முடியுமோ? உம்மை நான் தரிசிக்கப் பெற்றதால் எந்த வழியினாலாவது எனக்கு நன்மையுண்டாகும்; என்னை இந்த வேடன் விடாமல் இப்பொழுது கொன்று விட்டாலும் உம்முடைய திருமுக தரிசனஞ் செய்ததினால் நான் நற்கதி யடைவது நிச்சயம்," என்று கூறிற்று. அப்போது நபிநாயக மவர்கள் மானினுடைய புத்திக்கும் பக்திக்கும் மனமகிழ்ந்து இரக்கமுற்று அன்புடனே அதன் முகத்தைப்பார்த்துக்கொண்டு நின்றார்; அந்தமானும் நபிநாயக மவர்களுடைய திருவதனத்தைப் பார்த்துக்கொண்டு நின்றது.

மான் வேடன்கையினின்றும் விடுதலை யடைதல்.

இவ்வாறு மான் கூறியதையும், அதற்கு நாயகமவர்கள் கூறியதையும் கேட்டவுடனே அந்த வேடன் நபிநாயகமவர்களுடைய வார்த்தையில், சிறிது விசுவாசம் வைத்தான்; அதனோடு நபியவர்களைத் தரிசித்ததின் பயனாக அவனுக்குச் சிறிது விவேகமுமுண்டாயிற்று. அதனால் அவன், "இந்த மானை இவர் சொல்லின்படி விட்டுத் தான் பார்ப்போம்; இதனால் இந்த மானினுடைய தன்மையையும் இவருடைய தன்மையையும் தெரிந்துகொள்ளலாம்" என்று நபிநாயகமவர்களுடைய வார்த்தைக்கிணங்கி, அவர்களைப் பிணையாக ஏற்றுக்கொண்டு அந்த மானை, மறிக்குப் பாலூட்டும்படி அவிழ்த்துவிட்டான். அப்படிக் கட்டை அவிழ்த்து விடவே, அந்த மானானது நாயகமவர்களை அன்புடனே பார்த்து, "ஆண்டவன் திருத்தூதரே! வேடன் வலையிற் சிக்கித் தனிப்பட்டு வருந்திய எனக்காக இன்று பிணையானீர்; நான் விரைந்து சென்று மறிக்குப் பாலூட்டித் திட்டமாகத் திரும்பி வருவேன். வந்து உமது பாதத்தில் வணங்குவேன், நான் அவ்வாறு போய்ச் சொன்னமொழி தவறாமல் க்ஷேமமாகத் திரும்பி வரும்படி நீர் துஆ செய்யவேண்டும்" என்று சொல்ல, நபிநாயக மவர்கள் அதைக்கேட்டு, "உனக்கு நல்ல வெற்றியையும் மேலான பதவியையும் மேலோனாகிய ஆண்டவன் தருவான்; சுகமாகப் போய்வா," என்றார்கள்.

அந்த இனிமையான வார்த்தையைக் கேட்டவுடனே மானு னது, கன்றிய மனங்குளிர்ச்சியடைந்து குட்டியிடம்செல்ல நினைத்து நபி நாயக மவர்களை வணங்கிக்கொண்டு புறப்பட்டு விரைந்தோடி வழியில் குட்டை குளமும், வட்டப்பாறைகளும், சிம்மங்கள் சஞ்சரிக் கும் காடும், யானைகள் திரிகின்ற காடும், தில்லைவனமும், சந்தனக் காடும், வெண்மணல் நிறைந்த பாலைவனமும், தண்ணீரில்லாக் கான கமும், தாமரைப்பூக்குளங்களும், செந்நாயும் ஓநாயும் திரள் திரளா கத் திரிகின்ற விடங்களும், சிங்காரம் பொருந்திய செண்பக வன மும், சன்னியாசிகள் வாழுகின்ற பர்ணகசாலைகளும், நீரோடுங் கான்யாறுகளும், வேதாளங்கள் வாழுமிடங்களும், பூதகணங்கள் சஞ்சரிக்கு மிடங்களும், இந்திர கோபங்கள் ஊர்ந்து செல்லுமிடங் களும், ஏலம் விளையும்படியான மலைச்சார்பிலுள்ள குறிஞ்சி நிலத் தையும், ஏகாந்தமாகிய வெட்ட வெளிகளும், பசுக்கள் சஞ்சரிக்கி ன்ற முல்லை நிலமும், வேடுவர் காக்கின்ற தினைப்புனங்களும், தேன் சொரிகின்ற மலர்ச்சோலைகளும், தேவாங்கு வானரங்கள் சஞ்சரி க்கின்ற விடங்களும், காட்டுக்குறவர் வாழு மிடங்களும், கருஞ்சூ ரைக் காடுகளும், பல மலைப்பாம்புகள் ஊர்ந்து திரியு மிடங்களும், வன்னிமரச் சோலைகளும், மலைக்குன்றுகளும், அகிற் காடுகளும், குங்குமமரவனமும், குருக்கத்திக் காடும், எட்டி வனமும், கோங்கு மரச் சோலைகளும், சிறிய பூண்டுகள் நிறைந்த காடும், சுனைகளும், ஆறுகளும், புலிகள் சஞ்சரிக்கின்ற காடுகளும், மருத நிலத்தையும், நெய்தனிலத்தையும் கடந்து, "துன்பம் நீக்கி என்னை விடுதலை செய் தவரே! தீன தீன் முகம்மதரே! எனக்கு வழியில் துணை செய்பவர் நீரே." என்று சொல்லிக்கொண்டு சிட்டெனப் பறந்துபோய்த் தன் னினங்களைப் பற்பல விடங்களில் தேடி முடிவில் அவைகளிருக்கு மிடத்திற் சேர்ந்தது.

அவ்வாறு சேர்ந்த மாத்திரத்திலே தன் மறியையும் இனங்க ளையுங் கண்டு சந்தோஷங்கொண்டு குட்டியினிடம் சென்று அன் பான வார்த்தை விண்டு அதனை நோக்கி, "நீ சீக்கிரம் பாலுண்ணு வாய்," என்றது. அதைக் கேட்டவுடனே அந்தக் குட்டி மானை நோ க்கி, "தாயே? நீ எங்குச் சென்றாலும் சீக்கிரம் வந்து விடுவாயே; இன்றைக்கு இங்கேவர ஏன் இவ்வளவு நேரந் தாமதமாயிற்று?" என்று வினவ, அதற்கு மான், "புத்தியுள்ள என் மறியே! புதுமை யொன்றுமில்லை; நான் நெடுந்தூரஞ் சென்றிருந்தபடியால் சிறிது

தாமதமாயிற்று; நீ விரைந்து பால் பருகு." என்றது. அதைக்கேட்டு மறி, "நீ தொண்டை கட்டிப்போய் விழி சோர்ந்திருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவ மான், "வேறொன்றும் விசேஷமில்லை நான் ஓடி வரும்போது சண்டமாருதக்காற்று என்னைத் தள்ளி வந்தது அதனுல் இளைத்து விழிசோர்ந்து போனேன்," என்றது. அதன் மேல் மறி, "உன் பொன்னுன மேனியெல்லாம் புழுதி படிந்திருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவிற்று. அதற்கு மான், "காற்றினுல் அவ்வாறு புழுதி படைந்ததென்று கூறிற்று. அதன்மேல் மறி, "தாயே! நீ வாக்குத் தடுமாறி பேசுகின்முய்; நீ சொல்வதெல்லாம் பொய்; ஏதோ நேர்ந்திருக்கின்றது; எனக்கு நீ உண்மையைச் சொல்ல வேண்டும்; இல்லாவிடில் நான் பாலுண்ண மாட்டேன்' என்று கூறிற்று.

அந்த வார்த்தையைக் கேட்டவுடனே மான் அதனை அன்புடன் நோக்கி, "என் மறியே! எனக்கு நேர்ந்த விஷயத்தைக் கூறினுல் நீ மனம் வருந்துவாயென்று கருதி இதுவரை பொய்யான வார்த்தைகளையே கூறினேன்; நீ இப்போது சொல்லாவிடில் பாலுண்ண மாட்டேனென்று சொல்வதால் நான் நடந்ததைக்கூறுகிறேன் கேள்; பிள்ளையிடம் தாய் பொய் கூறுவது நியாயமில்லை; அப்படி யிருந்தும் நீ வருந்துவா யென்பதை உத்தேசித்தே அவ்வாறு கூறினேன்; நான் காட்டிலே நம்மினங்களாகிய உங்களுடனே நிற்கும்போது சிங்கம் முழங்கிய சப்தத்தைக் கேட்டுப் பயந்து நீங்களொரு திசையும், நானெரு திசையுமாகப் பிரிந்தோடியபின்னே நான் வழிதப்பிப் பல விடங்களிலும் ஓடிப்பாலை நிலத்திற்குள்புகுந்து வருந்தித் தாகத்தாலிளைத்துத் தண்ணீரகப்படாமல் நாவறண்டு பசிநோய் கொண்டு காலயர்ந்து பெருமூச்செறிந்து கண்ணிருண்டு, மேலுளைந்து வேர்வையொழுக ஒரு பக்கத்தி லொதுங்கி அங்கு மிங்குந் திரிந்தலைந்து கொண்டிருந்தேன்; அப்படி நான் அலைவதைக்கண்டு ஒரு கிருபையற்ற வேடன் தந்திரமாக என்னை வலைக்குட்படுத்திப் பிடித்துக் கொலைசெய்யத் தொடங்கினுன். அப்போது நான் உனக்குப் பாலுங்கொடுக்காமல் இறந்துபோவதைக் குறித்து எண்ணுது மெண்ணிப் புலம்பினேன். அவ்வாறு புலம்பும்போது என்னுடைய நல்ல காலத்தால் அங்கே நபி நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் வந்தார்கள்; அவர்களைக் கண்டவுடனே நான் சிறிது மனந்தேறி அவர்களுக்கு சலாமுரைத்தேன்; அவர்கள் பதிலுரைத்து, "நீ எப்

படி வலையிற்சிக்கினுய்,' என்று வினவினுர்கள். நான் நடந்ததைக்கூறி, 'என்னை வேடன் கையினின்றும் விடுதலை செய்துவிட்டால் குட்டிக்குப் பால் கொடுத்துவிட்டுத் திரும்பி வருவேன்' என்று கூறினேன். அதைக் கேட்டவர்கள் வேடனிடம் அநேகம் இதமான வார்த்தைகளைக்கூறி, எனக்குப் பதிலாக அவர்கள் அவனிடம் பிணையாகிக்கொண்டு என்னை விடுதலை செய்தனுப்பினுர்கள்; நான் விரைவில் உனக்குப் பால் கொடுத்துத் திரும்பிப்போய் அவர்களுடைய பிணையை நீக்கி விடுவதாகச் சொல்லி ஓடிவந்தேன்; இதுதான் நடந்த காரியம் இதனுலேதான் நான் இளைத்திருக்கின்றேன்'' என்று கூறிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே மறியானது, மனந்துடித்து, தாய் வேடன் கையி லகப்பட்டதற்கும் வருந்தாமல் நபி நாயகமவர்களைப் பிணையாக்கியதற்கு வருந்தி மானைநோக்கி, "அன்னையே! என்னகாரியஞ் செய்தாய்? பூலோகத்தில் இது நீதியான காரியமாகுமோ? வானமழிந்தாலும், கடல்தூர்ந்தாலும், தேகமழிந்தாலும் மகா ஜீவகாருண்யமுடைய நபி நாயகமவர்களைப் பிணை கொடுக்கலாமோ? இந்தப்பாவந் தீருமோ?' என்று கூறிச் சஞ்சலப்பட்டது. அதைக்கேட்டு மானுனது, "நான் செய்தது தகாக்காரியந்தான்; உன்னை உத்தேசித்துத் தான் இவ்வாறு செய்தேன்; இது தகாக் காரியமென்று நினைத்துத் தான் விரைவாகப் போகவேண்டுமென்று சொல்கின்றேன்; நீ விரைந்து பால் பருகு; நான் அரை நிமிஷத்திற் சென்று அவர்கள் பிணையை நீக்கி விடுகிறேன்,'' என்றுசொல்லிற்று.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே, அந்த மறியானது மானை நோக்கி, 'நீ நபியைப் பிணையாக்கி வந்தபடியால், உன்னுடைய பாலை யுண்ணுதல் எனக்குஹறுமாகும்,' என்றுரைக்க, அதனைக்கேட்டு மான் பதறி முகம் வியர்த்துப் பெருமூச்செறிந்து, வயிற்றெரிச்சல் கொண்டு, வாயில் வெண்ணுரை தள்ள, கண் மருண்டு, மதிமயங்கிக் கலங்கி வருந்தி மீண்டும் குட்டியை நோக்கி, 'என் அன்புள்ள மறியே! நீ இப்படிச் சொல்வது சரியன்று, நான் உன்பொருட்டே நபியைப் பிணையாக்கி ஓடிவந்தேன்; அப்படி உனக்காக ஓடிவந்தும் நீ இவ்வாறு சொல்கிருய்; நீ ஒன்றும் தடை சொல்லாமல் பாலைப் பருகு,' என்று சொன்னது. அவ்வாறு சொல்லிவேண்டியும் மறி அதற்கிணங்காமல் தாயை நோக்கி, "அன்னையே! நீ பரமண்டலம், பூமண்டலம், இருலோகத்தி லுள்ளவர்க ளெல்லோரும் போற்றத் தக்க மகா சிறப்புவாய்ந்த மக்கமா நகரில் அவதரித்த காத்திமுல்

அன்பியா செய்யிதுல் முற்ஸலீன் நபியவர்களின் பிணையை மாற்றி ஞல் மாத்திரந்தான் நான் பால் பருகுவேன்; அவர்கள் பிணையை மாற்றுதவரையில் நான் பாலுண்ணமாட்டேன்; விண் மண் எல்லா வற்றையும் படைத்த ஆண்டவனுணை இப்போதுன்பால் எனக்கு ஹறாம்," என்று உறுதியாகக் கூறிவிட்டது.

குனிந்து புல் கடியாத இளம்பருவமுள்ள அந்தக் குட்டியா னது இவ்வாறு கூறவே அந்த மானுனது, வயிறு அக்கினிபோல கொதிக்க, வருத்தமுற்று, "அப்படியானுல் நான் நபிநாயகமவர்களி டம செல்கின்றேன்," என்றுகுட்டியினிடம் சொல்லிவிட்டுத் திரும்பி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டது. அப்போது குட்டி அதனை நோக்கி, "தாயே! அந்தக் கருணை வள்ளலாகிய நபியவர்களைப் பார்க்க நானும் உன்னுடனே வருகிறேன்; நீ என்னையும் அழைத்துச்செல்," என்று சொல்ல, அவ்வாறே அதனையும் அழைத்துக்கொண்டு சென் றது. அவ்வாறு அந்த மான் குட்டியையுங் கூட்டிக்கொண்டு அவ்வி டத்தை விட்டுச் செல்லவே அந்தச்சமயத்தில், அதனுடைய ஆணும் இனங்களும் கூட்டமாக வந்து, அந்த மானை மறித்து, 'நீ குட்டியை அழைத்துக்கொண்டு இவ்வாறு ஆபத்தான விடத்திற்குப் புறப்பட் டுப் போகுதல் அழகன்று அழகன்று; வேடுவன் வலையிற் சிக்கி நல் லகாலத்தால் விலகி வந்தும் திரும்பி அவனிடம் செல்வது மதியீன மான காரியம்; நீ இப்பொழுது போகாதே,' என்று தடுத்தன. அப் போது மான், அவைகளை நோக்கி, 'நீங்கள் சொல்வது நியாயமற்ற வார்த்தை; நான் திரும்பி வருவதாகச் சொல்லி நபிநாயகமவர்களைப் பிணையாக்கி விட்டுக் குட்டிக்குப் பால் கொடுக்கும் பொருட்டு இங்கு வந்தேன்; நான் போகாவிடில் வேடன் நபிநாயகமவர்களை விடமாட் டான்; நான் சீக்கிரத்திற் சென்று சொன்னவாக்கை நிறைவேற்றி அவர்களுடைய பிணையை நீக்கி விடவேண்டும்; இல்லாவிடில் நான் மிகுந்த பாவத்திற்குள்ளாவேன்; நான் சீக்கிரம் சென்று அவரு டைய பிணையை நீக்கி வருகிறேன்," என்றுரைத்தது. இந்த வார்த் தைகளைக் கேட்டவுடன் அந்த மானின் துணையானது, "நீசொல்வது சரிதான்; திரும்பி வருகிறேனென்பது மாத்திரம் நம்பிக்கையில்லை; வேடனுயிருப்பவன் உன்னை மறுபடியும் விடுவானே? ஒருபோதும் விடமாட்டான்; ஆகலால், நீஅந்த வேடனிடஞ்செல்லாதே," என்று மறுபடியுங் கூறியது. அதற்கு மான், 'என்னை அவன் விட்டாலுஞ் சரி விடாது போனுலும் சரி; நான் சொன்னபடி அவ்விடம் சென்று

நபியவர்களுடைய பிணையை மாற்றி விடவேண்டும்; அதன்மேல் அந்த வேடன் என்னைக் கொன்றாலுங் கொல்லட்டும்; சாவுக்கஞ்சி நான் போகாதிருப்பேனாகில் சத்தியந் தவறிய பாவம் எனக்கு மிகுதியாக வந்து சேரும்; ஆதலால் என்னுடைய பிரயாணத்தைத் தடைசெய்யாதே,' என்று சொல்ல, இணையானது, "அப்படியானால் நீ, உன் வார்த்தைப்படியே அங்குச் சென்று உன் சத்தியத்தைக் காப்பாற்று; அதன்மேல் நபிநாயகமவர்கள் என்ன கட்டளையிடுகின்றார்களோ அந்தப்படியேசெய்,'' என்று சொல்லிவிடைகொடுத்தது.

மான், நபியருளால் ஆபத்து நீங்குதலும் வேடன் ஈமான் கொள்ளுதலும்.

மேற்கூறியபடி ஆண் மான் விடை கொடுக்கவே, பெட்டைமானானது தன் குட்டியுடனே அவ்விடத்தை விட்டு நீங்கிப் பல மரங்களடர்ந்த காடுகளையும், புல்லும் கல்லும் பொரிந்துபோன வெப்பம் பொருந்திய பாலை நிலத்தையும் தாண்டி வேகமாகப்போய் நபிநாயக மவர்களைக்கண்டு மனதிலே மிகச் சந்தோஷங்கொண்டு அவர்களுக்கு ஸலா மோதிற்று; மறியும் அவ்வாறே ஸலாமுரைத்தது. அப்போது, முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களும் பிரதி ஸலா முரைத்தார்கள். அவர்கள் அவ்வாறு அன்பாகப்பதிலுரைத்த பின்பு, அந்த மான் அவர்களை நோக்கி, 'எங்கள் நாயகமாகிய முகம்மதரே! நான் உங்களைப் பிணையாக்கிச் சென்றும், என் மன நோக்கம் நிறைவேறவில்லை; நீங்கள் என் பொருட்டு பிணையாயிருப்பதை இந்தக் குட்டி கேள்விப்பட்டு இந்தப்பிணையை நீக்காத வரையில் நான் உன்பாலுண்ணுதல் ஹறாம்; ஆதலால், நான் உன்னிடம் பால் பருக மாட்டேனென்று சொல்லிவிட்டது; அவ்வாறு சொல்லிவிட்டு அதுவும் என்னுடனே புறப்பட்டு வந்திருக்கின்றது; இன்னும் அது பற்போடாதது; புற்கடியாதது; இத்தகைய இளங்குட்டி இவ்விதஞானத்தை யுடையதாய் தங்கள்மீது விசுவாசங்கொண்டு பாலுண்ணஹறா முரைத்து இன்னும் பட்டினியாகவே யிருக்கின்றது," என்று கூறிற்று. இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே, நபிநாயகமவர்கள், அந்தக் குட்டியின்மீது விசுவாசங்கொண்டு, மானைநோக்கி, "இந்தக் குட்டி இவ்வளவு சத்தியமுள்ளதா யிருப்பதனாலே, இது உயிருடன் சுகம்பெற்று வாழும்பொருட்டு, வேடுவன் உன்னைவிட்டு விடும்படி ஆண்டவன் திருவருள் புரிவான்; நீஎதற்கும் மனங்கலங்காதே,'' என்றுரைத்தனர்.

இவ்வாறு நபிநாயகமவர்கள் கூறியவுடனே அங்கு நடந்ததை யெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற கருமைதங்கிய வேடன் மனதில் ஆச்சரியங் கொண்டவனாய், "இந்தமானோ இவரைப் பிணையாக்கி விட்டுப்போய்ச் சொன்ன சொற்றவறாமல் மீண்டு வந்து விட்டது; இதன் குட்டியோ இவரைப் பிணைப்படுத்தியதற்காகப் பாலுண்ணமாட்டேனென்று பட்டினி யிருக்கின்றது; இவைகள் இவர் விஷயத்தில் மிகவும் பத்தியுடையவைகளா யிருப்பதினாலே இவர் மகா புண்ணிய புருஷர்போல விளங்குகின்றார்; இவைகள் இவ்வாறு இவரிடத்தும், இவருடைய இஸ்லாமார்க்கத்தினிடத்தும் விசுவாசம் வைத்திருப்பதினாலே இவைகளுக்கு நற்கதி கிடைப்பதில் என்ன தடை யிருக்கின்றது; இவைகளுக் கேற்பட்ட அறிவு நமக்கில்லாமற் போய்விட்டது; அதனாலேயே நாம் முன்னே இவர் வார்த்தையை மதிக்காமற் பேசினோம்; இனிமேலாவது நாம் இவர்மீது விசுவாசம் வைத்து இவரிடம் நல்லுபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டும்; இவரைத் தோத்திரஞ்செய்து இவருடைய பாதங்களைத் தொழாவிடில் நமக்கு நற்கதி கிடைக்கமாட்டாது; மான்கள் சத்தியந் தவறாதிருக்கும் புதுமையை நாம் எப்போதும் கண்டதில்லை; இது, இவருடைய மகிமையினாலேயே நடந்திருக்கின்றது; ஆதலால், நாம் இந்த மானை இப்பொழுதே விட்டு உடனே இவருடைய பாதங்களை வணங்கி, ஈமான் கொள்ளவேண்டும்," என்று துணிந்து, நபிநாயக மவர்கள் சமுகத்திற்போய் நின்று, "ஹக்கனோடுரைசெய்த முகம்மதரே! எல்லாச் சீவராசிகளிடத்தும் அன்பைச்செலுத்துகின்ற கருணைவள்ளலே! அளவிடமுடியாத மகிமையை யுடையவரே! உம்முடைய மகிமைச் செயல்களை யுணராமையால், நான் உமது வார்த்தையை மதியாமல் உம்மைப் பிணையாக்கி மிகுந்தபாவத்துக்குள்ளானேன்; இந்த மானினுடைய செய்கையால் இப்பொழுது உம்முடைய பெருமையை உணர்ந்தேன்; இந்தமானை இனிநான் கொல்லமாட்டேன்; இப்பொழுதே விட்டுவிட்டேன்; என்னை நீர் நல்லவழியிற் றிருப்பி என்னுடைய பாவங்களைப்போக்கி ஆட்கொண் டருளவேண்டும்; எனக்குக் கலிமாவை உபதேசித்தருள வேண்டும்," என்று பலவாறு துதித்து அவரிடம் கேட்டுக்கொண்டான். உடனே நபிநாயகமவர்கள் அவனுக்கு அவ்வாறு அறிவு உண்டானதற்காக மிகுந்த சந்தோஷத்தை யடைந்து அவனுக்கு கலிமாவை உபதேசித்து அவனை அப்பொழுதே இஸ்லா மாக்கினர்.

அப்படி அந்தவேடன் ஈமான்கொண்டு தெளிவடைந்த பின்னர் நபி நாயகமவர்கள், அந்த அன்புள்ளமானை, அழகிய கண்களால் நோக்கி, "என்மீது அன்புமிகுந்த மானே! இந்த வுலகத்திலுள்ள மான் கூட்டங்களிலே நீ மகாசத்தியம் பொருந்திய மான்; உன்னைப் போல் நீதியமிந்த மானை நான் இதுவரை கண்டதில்லை," என்று புகழ்ந்து கூறினர். அதைக்கேட்டு அந்தமான், "ஆண்டவனருள் சேரும் முகம்மதரே! நான் எப்பொழுதும் உங்களுக் கடைக்கலம்; என்னை எக்காலத்திலும் தாங்கள் ஆண்டருளவேண்டும்," என்ன, அதற்கு றஸூலுல்லா, அந்தமானைப் பார்த்து, "உன்மனதின்படியே நீவிரும்பிய காரியங்களை யெல்லாம் மேலாகிய இறைவன் கொடுத்தருள்வான்; நீ எதற்கும் யோசிக்க வேண்டாம்; இனி, மானினங்களுக்குள்ளே நீமிகவும் சிறப்புற்று விளங்கிஜீவித்திருப்பாய்," என்றனர். அந்த அன்பான வார்த்தைகளைக் கேட்டவுடன் மான் அடங்காமகிழ்ச்சிகொண்டு, 'அல்ஹம்து லில்லாஹி,' என்றுரைத்திட, அதன்மேல் நாயக மவர்கள், அந்தமானை நோக்கி, "உன்னுடைய கட்டெல்லாம் நீங்கிவிட்டது; உன்குட்டியின்நோக்கப்படி நானும் பிணையினின்றும் நீங்கினேன்; வேடனும் நல்வழிக்குத் திரும்பினான்; எல்லாக் காரியங்களும் நன்மையாகவே முடிந்தன; ஆதலால், இனி நீ உன்குட்டிக்கு யாதொரு தடையுமின்றிப் பாலூட்டுவாய்," என்று கட்டளை யிட்டனர். இந்தத் திருவாசகத்தைக் கேட்டவுடனே மான், அவருக்கு ஸலாமுரைத்துத் தன்குட்டியினிடத்திற்போய், "என் அன்புள்ள மறியே! நம் நபிநாயகமவர்கள் தங்கள்பிணையையும் நீக்கி என்னையும் விடுதலை செய்து எனக்குயிர் கொடுத்து வேடனையும் நல்வழிப்படுத்தி ஆட்கொண்டருளினார்கள்; இனி நீ எவ்வித தடையுமின்றிப் பாலுண்ணலாம்; நாயகமவர்களே உனக்குப் பால்கொடுக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றார்கள்; ஆதலால், நீஇப்பொழுது பாலைப்பருகி பசிதணிவாயாக," என்றுரைத்தது. அதைக் கேட்டவுடனே மறி, தாயைநோக்கி; "அன்னையே! நம் நாயகமவர்கள் உன்னுடைய கட்டை நீக்கி எனக்குப்பால் கொடுக்கும் படிக்கும் கட்டளை யிட்டனர்; இவர்களுக்கு நாம் வழிவழியாக அடிமைபடக் கடமைப் பட்டிருக்கிறோம்; இவர்களுடைய மகிமையை உலகத்தில் எவராலும் அளவிட்டறிதல் முடியாது; இவர்கள் வேடனையும் இஸ்லா மாக்கினார்கள்; நமக்கும் இவர்கள் உயிர் கொடுத்தார்கள்; எல்லாம் இவர்களைத் திருத்தூதராக அனுப்பிய ஆண்டவன் செயலேயாம்," என்று தேகம்

புளகித்து சந்தோஷத்துடனே துள்ளி, உடம்பை நெளித்து, வாலை மேலே தூக்கி, வலஞ்சுற்றி, மாசில்லாத நபியவர்களை வாழ்த்திப் பால் குடித்தது; மானும் அதனை நக்கி அன்பால் பாலை மிகுதியாகச் சுரப்பித்துக் கொடுத்தது; மறிவயிறாரப்பாலையுண்டு பசிதணிந்தது. அதன் மேல் அந்தமான், குட்டியை நோக்கி, "என் அருமையான மறியே! இந்தப் பழமையான பூமண்டலத்திலே துய்யோனாகிய ஆண்டவன் நம்மை அமைத்தபடியே புல்லும் நீரும் புசித்து, வனத்தில் இன்னும் நெடுங்காலம் சுகத்துடனே வாழும்படி நம்முடைய நாயகமவர்கள் நமக்கு உயிர் கொடுத்தருளினார்கள்; ஆதலால், நாம் இன்று முதல் இவர்களிடம் கலிமா உபதேசம் பெற்று இவர்களுக் கடிமையாகவேண்டும்; இவர்களில்லாவிடில் நானும் உயிர் நீங்கியிருப்பேன்; நீயும் இறந்திருப்பாய்; இவர்கள் இவ்வாறு நமக்கு நன்றிசெய்தபடியால் இந்தநன்றியை நாம் எப்பொழுதும் மறக்கலாகாது," என்று அந்தமறியுடனே சென்று நபிநாயகமவர்களுடைய பாதங்களை வணங்கி, "எங்களுக்கு உயிர்கொடுத்த உத்தமரே! நாங்கள் காட்டில் சஞ்சரிக்கும் பிராணிகளா யிருந்தபோதிலும், தங்கள்மீது மிகுந்த விசுவாச முடையவர்களா யிருப்பதினாலே, எங்களுக்கு உயிர்கொடுத்துக் காப்பாற்றினது போலவே கலிமா வுபதேசமும் செய்து எங்களைக் காப்பாற்றி யருளவேண்டும்," என்றுகூற, அவ்வாறே நாயகமவர்கள் இரங்கி அவைகளுக்கும் செவியில் கலிமாவை உபதேசித்தனர். பின்னர் அவைகளும் ஈமான்கொண்டு நபிநாயகமவர்களை வணங்கி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு காட்டிற்சென்று தம்மினங்களுடனே கூடி, நடந்தது கூறிமகிழ்ந்து இனிதாகவாழ்ந்திருந்தன. பின்பு, வேடனுக்கும் விடைகொடுத்து அவனை அனுப்பிவிட்டு, முஹம்மது முஸ்தபாசல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கள் தங்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

அதன்மேல், மேற்கூறியபடி நபிநாயக மவர்களுடைய திருவருளால் ஈமான்கொண்ட வேடனானவன், உடனே தன்குடிசைக்குச்சென்று இஸ்லாம்நெறியை மேற்கொண்டு, தன் கோத்திரத்திலுள்ளவர்களையெல்லாம் இந்த மேலாகிய இஸ்லாமார்க்கத்தில் வரவழைத்து, தீங்கான சொற்களையுடைய் குபிரோட, நபிநாயகமவர்களுடையதிருவாக்கையே உயர்வாக மதித்து அந்த அழகிய வேதத்தை மனதிற்றியானித்து, உடனே அந்தக்காட்டில் குடியிருப்பதைவிட்டு விரைவாகத் தன்கூட்டத்துடனே பிரயாணமாகிச் சென்று, மக்கமாநகரத்தைச்சார்ந்து, ஆடைகள், செம்பொன்கள், அன்னதானமுத யஸதகாச்செய்து, அருமையானகஃபாவைபிரதக்ஷணமாகவந்துசோதியின் திருநாமமோதி துஆவிரந்து, பரிசுத்தராகிய நபியவர்களுடைய பறக்கத்தினாலே உயர்ந்தமறை யுணர்ந்த குறைஷிமார்களைப்போல தக்வா செய்யும் முக்கியத்தால், இபாதத்தின் நலமாக, அவனுடைய முகமானது தாமரைமலர்போலவும், அழகிய நெற்றியானது வளைந்த

மான்ஈமான் கொண்டகிஸ்ஸா.

இளம்பிறை போலவும், கன்னங்கள் மாவடுவைப்போலவும், கழுத்து கமுகைப்போலவும், பிரகாசம் பொருந்திய பற்கள் முத்துகளைப்போலவும், இதழ்கள் கொவ்வைக் கனியைப் போலவும், இரண்டு கரங்களுங் கால்களும் தாமரை மலர்போலவும் ஆகி, அவன் பசும் பொன்னைப் போன்ற மேனியும், கட்டழகும், சிம்மம்போன்ற உயர்ந்த நடையும், அழகிய வயிறும், அருட்பார்வையும், பரிசுத்த மனமும் உடையவனாய், சஃபத்துல்லாவுக்கு வடக்கேயுள்ள வெளியில் அழகிய வேலைப்பாடுள்ள மாளிகை யொன்றியற்றி, தான் அதற்கு முன்னேசெய்த ஜீவவதைகளாலுண்டான கொலைப்பாவம்தீரும்படி அன்னதானஞ் செய்து, செம்பொன், ஆடையாபரணங்கள் முதலியவற்றை கைறு கொடுத்து, அன்பியாக்கள் அவுலியாக்கள் ஷெய்கு செய்யிது மார்கள் ஆகிய இவர்களுக்கும் அதிகமான தங்கத்தை ஹதியா கொடுத்து, அவர்களுடைய துஆ பறக்கத்துகளையும் பெற்று, காலை பஜரில், சேவல்கள் மணிச்சிறகை அடித்துக்கூவி ஜனங்கள்விழிப்பதற்கு முந்தி அந்த அழகிய வர்ணமாளிகையில் தன்னுடைய சுற்றத்தார்களுடனே ஒரு திவ்விய புருஷனைப்போற் குடிபுகுந்து தினந்தோறும்காலையில்எழுந்து, பள்ளிவாசலுக்குச்சென்று ஒலுச்செய்து, இமாம் ஜமாத்துடன் தன் கடமையை முடிப்பதும், இப்படியே ஐந்துநேரத் தொழுகையையும் பேணிநடத்தி வீடுவந்து சேர்வதும், ஆண்டவன் இளக்கிய திருநாம வேதவாக்கியங்களை ஓதியுணர்வதும், ஆண்டவன் ஏவல்களைக் கொண்டும் விலைகள் களைத்தவிர்த்தும் மார்க்க ஒழுங்கில் நடப்பவனாய் எக்காலத்தும் குறையாத செல்வத்தைப் பெற்று, உலகமெல்லாம் புகழ் நிலையாக, நெடுங்காலம் வாழ்ந்துகொண்டிருந்தான்.

வாழ்த்து.

எத்தலத்தி லுள்ளவர்களும் புகழத்தக்க மக்கத்திற் பொருந்திய நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களுடையது ஆபறக்கத்தினாலே எல்லோரும் படித்து நல்வழிப்பட்டுக் கடைத்தேறும்படி செந்தமிழ் வசனமாகச்செய்த இந்நூல்வாழி; எங்கும் நிறைந்த அல்லாகுத்த ஆலாவின் புகழ்வாழி; இக்கதைக்கு நாயகராகிய நபிநாயகம் முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களின் பதம்வாழி; அன்பியாக்கள், அவுலியாக்கள், பெரியோர்கள் பதம்வாழி; இதனை படிப்போர்வாழி; கேட்போர்வாழி; இதனைப் படிக்கும்படி செய்வோர்வாழி; ஆமீன்! ஆமீன்!! யாறப்பில்ஆலமீன்.

மான்கதை வசனமென்னும்

மான்ஈமான் கொண்ட கிஸ்ஸா முற்றுப்பெற்றது.

172666

பிஸ்மில்லாஹி

தற்போது யேற்பட்ட சகாய விலைகள்.

புஸ்தக விளம்பரம்.

தங்கப்பாட்டு மாலையும் ஷிபாமாலையும்	0	4	0
ஷை அறபுத்தமிழ்	0	8	0
கற்பமாலையும் நஸீஹத் துன்னிஸாவும்	0	4	0
ஷை அறபுத்தமிழ்	0	6	0
ஜுதூரிமாலையும் முஸீபத்து விலக்கல் முனாஜாத்தும்	0	4	0
ஷை ஜுதூரிமாலை தனிய	0	2	0
மிஃறாஜு மாலை வசனம்	0	4	0
மான்கதை பாட்டு	0	4	0
ஷைமான்கதை வசனம் மான் ஈமான்கொண்டகிஸ்ஸா	0	5	0
ஷைபாட்டும் ஷைவசனமும்	0	8	0
மரணவிளக்கம் மனதை துலக்கும் சுத்தப்பதிப்பு	0	4	0
மரணவிளக்கமும் ஹதீதும்	0	2	6
ஞானஆசாரக் குறவஞ்சி	0	2	0
குணங்குடி மஸ்தான்சாஹிபு ஆனந்தக் களிப்பு	0	0	6
ஆத்தங்கரை நாச்சி முனாஜா	0	0	6
சீறா உல்லாசம்	1	0	0
ஹஜரத்து இமாமுல் அஃலம் ஹனபி றஹமத் துல்லாஹி அலைஹியின் பிக்ஹுல் அக்பரின் தர்ஜுமாதமிழ்	0	6	0
முகியதீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்	1	5	0
பாரீஸ்கதை	2	8	0
ஹாத்தீம்தையுடையகிஸ்ஸா	1	2	0

இரத்தின முகம்மது காரண சரித்திரம் சுத்தபதிப்பு	0	5	0
பேரின்பவாழ்வு 4-பாகமும்	1	8	0
இஸ்லாத்தின் மகிமை	0	6	0
குணங்குடி மஸ்தான்சாஹிபு ஒலியுல்லா அவர்களால் அரபியில் சொல்லியஞானப் புதையல் முனாஜாத்து தர்ஜுமா தமிழ்	0	12	0
ஷை மஸ்தான் சாஹிபு சொல்லிய ஞானத்துதி வித்ரியா தர்ஜுமா தமிழ்	0	6	0
குலிஸ்தான் பூங்காவனம்	1	6	0
பெரியபஞ்சரத்தினமாலை	0	5	0
யாசீன் தர்ஜுமா தமிழ்	0	5	0
பெரியபல பாடத்திரட்டு	1	12	0
சித்திரக்கவிபலபாடதிரட்டு	2	0	0
லறூருல் முஸ்லிமீன்	1	4	0
முஹயத்தீன் ஆண்டகை சத்துரு சங்காரம்	0	10	0
தமீமுல் அன்சாரி கிஸ்ஸா	0	4	0
தமீமுல் அன்சாரிமாலை	0	6	0
கதீஜாநாயகி, பாத்திமாநாயகி திருமண வாழ்த்து	0	4	0
நஸ்ஹுல் ஹதீது	3	0	0
ஸீரத்துல்பாரூக்	1	8	0
புருதாமாலை	0	6	6
தற்கரை பீர் முஹம்மது சாஹிபு பாடிய திருப்பாடற்றிரட்டு	2	0	0
ஞானியார்சாகிபுதிருப்பாடல்	5	0	0

முக்கிய கவனிப்பு:—நமது கம்பெனியில் இன்னும் நமது இஸ்லா மார்க்க சகலவிதமான அறபுத்தமிழ் கிதாபுகளும், சுத்த த்தமிழ் புஸ்தகங்களும், குறுஆன் ஷரீபுகளும், ரப்பர் சீல்களும், அத்தர் சென்றுகளும், கூந்தலுக்கு வாசனை எண்ணைகளும், நாட்டுஜெவுளி கயிலி தினுசுகளும், மருந்து வகைகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், மற்றும் சர்வசமய சகலவிதமான சாமான்களும், தேவையான கனவான்கள், ரொக்கத்திலும், வி-பி. போஸ்டு மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். மதராஸ் வியாபாரிகள் 1917 லும் இதற்கு பின்னும் யேற்படுத்திய கிரயஜாப்தா கேட்லாக் குறிப்பு முதலியவைகளில் காணப்பட்ட கிரயத்திற்கு நாங்களும் அனுப்பிக்கொடுக்கப்படும். எமது கம்பெனியில் யேற்படுத்திய கேட்லாக் வேண்டுமானால் அரையணு ஸ்டாம்பு அனுப்பிவைத்தால் தடையன்றி உடனே அனுப்பிக் கொடுக்கப்படும்.

விலாசம்:— வா-மு-யூசுபுலெப்பை அண்டு கம்பெனி,

நே. 68 மூர்த்தெருவு, மதராஸ்.